
ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



"Let mum rest"
- *By Pope Francis*

தை - 2020









ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...

# அன்புடன் உங்களோடு ...


## அன்புமிக்கவர்களே!

இறைவனிடமிருந்து இன்னுமொரு ஆண்டு நமக்குக் கிடைத்துள்ளது. இந்த புதிய ஆண்டைத் தந்து இறைவன் இன்றும் நம் மேல் அக்கறையாய் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தகிறார். இந்த வருடம் முழுவதும் எம்மையும் எம் குடும்பத்தையும் பாதுகாக்க தன்னுடைய தாயை அவர் எங்களோடு அனுப்பியிருக்கிறார்.

இடையர்களைப் பற்றி கூறப்படும் அருள்மிக்கதொரு பாரம்பரியக் கதை உண்டு. குழந்தை இயேசுவைக் காணவந்த இடையர்கள் ஒவ்வொருவரும் பல பரிசுகளை வழங்கினர். அந்தப் பரிசுகளை வைக்க இடமின்றி அன்னை மரியாவும், யோசேப்பும் தடுமாறினர். குழந்தை இயேசுவைத் தாங்கி நின்ற அன்னை மரியாவின் கரங்கள் பரிசுகளால் நிறைந்தன. அவ்வேளையில், ஒரே ஓர் இடையர் மிகவும் ஏழ்மையில் இருந்ததால், அவரால் எதுவும் கொடுக்க முடியாமல், ஓரத்தில் நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட அன்னை மரியா, அவரை அருகில் அழைத்து, தன் கரங்களில் இருந்த குழந்தை இயேசுவை அவர் கரங்களில் ஒப்படைத்தார். தான் எதுவும் கொணரவில்லையே என்று வெட்கித் தலை குனிந்திருந்த இடையரின் கரங்கள், கடவுளைத் தாங்கிய தொட்டிலாக மாறின.

என்னுடைய கரங்களில் ஒன்றுமே இல்லையே; நான் ஏழையாக இருக்கிறேனே, என்ன செய்வது? என்று தடுமாறி, வெட்கத்தினால் தலைகுனிந்து, பலராலும் ஒதுக்கப்பட்ட நிலையில் வழிகாட்ட யாருமில்லையே என்று பல நேரங்களில் நாம் யோசிப்ப துண்டு. அப்படியான நேரத்தில் நாம் எதைக் குறித்தும் கவலைப்பட தேவையில்லை. காரணம், வெட்கித் தலை குனிந்த இடையனுக்கு இயேசுவை பரிசாக அவனது கரங்களில் கொடுத்தது போல அன்னை மரியாள் குழந்தை இயேசுவை எம்முடைய கரங்களில் கொடுப்பாள். இயேசு எமக்குப் பரிசாகக் கிடைத்தால், எம் வாழ்வு மாறும்; பயணங்கள் வெற்றியடையும்; நாம் நினைத்ததை அவர் நமக்காகச் செய்து முடிப்பார்; உன் குடும்பத்தோடு பயணிப்பார்; ஆண்டு முழுவதும் உன்னை ஆசீர்வதிப்பார்.

— ஆசிரியர் —



"கலங்காதே!
இதுவரை நடத்தினவர் இனியும் நடத்துவார்; திடன்கொள்!"

முடிவுத்திகதி
31.01.2020

# சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 151



1. நோவாவின் பதல்வர்கள் யார்?

   விடை: ........................................................................................................................

2. காம் தன் தந்தை போதையில் எப்படி கிடப்பதைக் கண்டான்?

   விடை: ........................................................................................................................


3. நோவா எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

   விடை: ........................................................................................................................

## நோவாவும் அவர் புதல்வரும்

**தொடக்கநூல் 9:124, 28-29**

சேம், காம், எப்பேத்து, ஆகியோர் பேழையிலிருந்து வெளிவந்த நோவாவின் புதல்வர். காம் கானானின் தந்தை. இவர்கள் மூவரும் நோவாவின் புதல்வர். இவர்களிலிருந்துதான் மண்ணுலகு முழுவதும் மனித இனம் பரவியது. நோவா நிலத்தில் பயிரிடுபவராகித் திராட்சைத் தோட்டம் அமைத்தார். அவர் திராட்சை இரசத்தைக் குடித்துப் போதைக்குள்ளாகித் தம் கூடாரத்தில் ஆடை விலகிக் கிடந்தார். கானானின் தந்தையாகிய காம் தன் தந்தை திறந்த மேனியாராய்க் கிடப்பதைக் கண்டு, வெளியே இருந்த தன் இரு சகோதரரிடம் அதைத் தெரிவித்தான். அப்பொழுது சேமும், எப்பேத்தும் ஒரு துணியை எடுத்துத் தங்கள் இருவரின் தோள்மேல் போட்டுக்கொண்டு பின்னோக்கி நடந்து தங்கள் தந்தையின் திறந்த மேனியை மூடினர். அவர்கள் முகம் எதிர்ப்பக்கம் நோக்கி இருந்ததால் தங்கள் தந்தையின் திறந்த மேனியை அவர்கள் பார்க்கவில்லை. நோவாவிற்குப் போதை தெளிந்ததும், தம் இளைய மகன் தமக்குச் செய்ததை அறிந்தார். வெள்ளப் பெருக்குக்குப் பின்னர் நோவா முந்நூற்றைம்பது ஆண்டுகள் வாழ்ந்தார். இவ்வாறு, நோவா தொள்ளாயிரத்து ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தபின் இறந்தார்.



தபாலகம் / தொ.பே. இல: ..........................................................................................

(பரிசு அனுப்பவேண்டிய பங்கு: ..........................................................................

..........................................................................

..............................................................

..............................................................:

..............................................................:

-:

சேரல் :

## வர்ணம் தீட்டும் போட்டி – இல. 151

தொண்டன்
அ.பெ. எண் – 44
மட்டக்களப்பு.

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - [illegible] பெப்ரவரி

மலர் - 51 இதழ் - 12

தை - 2020

ஆசிரியர் :

■ அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு

■ சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


புத்தாண்டை நம்பிக்கையோடு .................... 02

கடுகுக் கதை .................... 04

மன்றாடுங்கள் .................... 05

மனச்சிறை .................... 06

மனித வாழ்க்கை .................... 08

ஏதோ சொல்லணும்னு .................... 10

பணம் .................... 12

அதை மட்டும் செய்யுங்கள் .................... 15

திருஅவைச் செய்திகள் .................... 16

கருவறைக்குள் சிசு .................... 17

பேச்சுக்கு அழகும், அளவும், அர்த்தமும் .................... 18

மாணவர் பக்கம் .................... 19

ஆயரின் மடல் .................... 21

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் .................... 24

சரித்திரம் புகழ் பேசட்டும் .................... 25

வினாவிடைப் போட்டி .................... 26

போட்டி முடிவுகள் .................... 27

திருவிவிலியம் கற்போம் .................... 28



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=
(தபாற் செலவு உட்பட)

# புத்தாண்டை

## நம்பிக்கையோடு வரவேற்போம்



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
**மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்**

புத்தாண்டு நம் அனைவருக்கும் பிறந்தநாள். கடவுள் மற்றுமொரு ஆண்டை நமக்குப் கொடுத்து வாழ்வாங்கு வாழ அனுமதிக்கின்றார். “இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் கடவுள் உலகின்மேல் இன்னும் சலிப்படையவில்லை என்ற நற்செய்தியுடன் பிறக்கின்றது” என்று ஓர் அறிஞர் கூறுவார்.

கடவுள் இன்னும் நம்மை அன்பு செய்கிறார். கடந்த ஆண்டில் நாம் செய்த குற்றங்களை மன்னித்து விட்டார் என்பதன் அடையாளம் இதுவாகும். புத்தாண்டில் முதல் மணியில் கிடைக்கும் இந்த ஆசீர்வாதத்தின் மூலம் ஆண்டவருக்குள் புதிதாய்ப் பிறக்கின்றோம். நாம் புதுமை விரும்பிகள். புது சட்டை, புது சேலை, புது நாற்று, புது நெல், புது தம்பதிகள், புது பள்ளி, புது பங்கு, புது பங்கு சுவாமியார்..... அதே சமயத்தில் வருங்காலம் எதையெதைத் தன்னுடன் கொண்டுவரும் என்பது நமக்குத் தெரியாது.

நேற்றிருந்தவர் இன்றில்லை. இன்றிருப்பவர் நாளை இல்லை என்ற பெருமையுடையது இவ்வுலகு. அதாவது இவ்வுலகில் எதுவும் நிரந்தரம் இல்லை. எல்லாம் மாறிக் கொண்டே இருக்கின்றன. மாற்றம் என்பதே நிஜமானது. கடந்த காலத்தில் எம்மோடு இருந்தவர்கள் இன்று எம்மோடு இல்லை. இந்த வருடத்தில் எம்மோடு இருப்பவர்கள் அடுத்த வருடம் எம்மோடு இருப்பார்கள் என்பது நிச்சயமில்லை.

மாற்றங்கள் அனைத்தும் பொதுவாயினும் வாழ்க்கையில் புதிய பார்வைகளை மேற்கொள்ள புத்தாண்டு ஒரு வாய்ப்பாகும். பிறக்கும் இனிய புத்தாண்டு நம் அனைவருக்கும் அன்பையும் மகிழ்ச்சியையும் நோய் இல்லாத வாழ்வையும் கொடுக்கும் ஒரு புதிய ஆண்டாக மலர, இந்த ஆண்டு நம் வாழ்வில் எல்லாவிதமான வெற்றியையும், அன்பையும், சகோதரத்துவத்தையும் அள்ளிக் கொடுக்கட்டும்.

எபிரேய மொழியில் ‘வணக்கம்’ என்பதனை ‘உங்களுக்கு அமைதி உண்டாகுக’ என்று கூறுவர். அவர்களின் சிந்தனையில், காலையிலும் மாலையிலும் இரவிலும் நாம் ஆண்டவரின் அமைதியில் வாழ வேண்டும். நாம் இருப்பதும், இயங்குவதும் அவரில்தான் என்ற பொருள் கொண்டது. இந்த ஆசீர்வாதம் நல்லவர்களின் ஆசீர்வாதம் என்பது ஏழேழு தலைமுறைக்கும் உடன் வரும். இந்த ஆசீர் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று கடவுள் தரும் வாக்கு றுதியாகும்.

**ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

நல்ல விளைச்சல் தந்து கால் நடைகளைப் பெருகச் செய்து, மேற்கொள்ளும் அனைத்தையும் வெற்றியின் முகத்திற்கு அழைத்துச் செல்வாராக

(இச 28:2-14) என்பது இதன் அடிப்படைப் பொருளாகும். லூக் 24:50 இல் உயிர்த்த இயேசு தருகின்ற இறுதியான சொல் ஆசீர்வாதமாகும். ஆசீர்வாதம் கடவுள் தருகின்ற அன்பளிப்பு. உயிரூட்டும் அன்புக்கொடை. நம்புகின்ற மக்களை மேம்படுத்தி வாழ்வு தரும் உயிராற்றல் இதனுள் உள்ளது. நிறைவான சமாதானம் இதிலுண்டு.

இந்த ஆசீர்வாதம் நமது நல்வாழ்வுக்காக மட்டுமல்ல, பிறருக்கு நாம் ஆசீர்வாதமாக அமையவும் அழைத்துச் செல்கின்றது. ஆபிரகாமைத் தேர்ந்தெடுக்கும் ஆண்டவர், அவர் வழியாக உலக இனங்கள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் (தொநூ 12:4) என்று கூறுகின்றார். அந்த ஆசீர் நம்மோடு தங்கும். இந்த மண்ணோடு தங்கும். நம் அயலாரோடு தங்கும். கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பதே ஒருவனுக்குப் பெருமையாகும். கடவுளே தருகின்ற இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தரும் கருவிகளாக குருக்கள் செயல்படுகின்றனர்.

பஞ்சத்திலிருந்தும், பகைவரின் படையெடுப்பிலிருந்தும் பாதுகாப்பது படைத்தவரின் கடமையாகும். இறைவாக்கினர்கள்தான் மக்களின் சாமக் காவலர்கள். விவிலியக் கடவுள் தன் மக்கள் வெற்றி பெறும்போது தானும் வெற்றி பெறுகின்றார்.

**தன் முக ஒளியை உன்மீது வீசச் செய்வாராக! (திபா 67:1)**

மக்கள் மீது அவர் கொண்டுள்ள உள்ளார்ந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடு இதுவாகும். புதுநாளைத் துவக்கும்போது கடவுள் அவரது இதயத்தில் நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும். தன் மக்களின் சார்பான செயல்பாட்டுக்கு அடையாளமாக அவர் தன் முக ஒளியை வீசுகின்றார். அவர் கோபம் கொள்ளும்போது தன் முகத்தை மறைத்துக் கொள்கின்றார். அவர் வந்து நுழையும் வாழ்வில் சோகம் இல்லை. அடிமைத்தனமில்லை. அறியாமை இல்லை. சூரியன் சந்திரன் தேய்ந்தாலும் அவரின் ஒளி பன்மடங்கு அதிகமாக ஒளிரும்.

**இரக்கம் காட்டுவார் –**

சாத்தான் கூட தன் குற்றத்தை ஏற்றுக்கொள்ளும்போது கடவுள் அதை மன்னித்து விடுவார். கடவுள் நீதியுள்ளவர். தண்டித்த உடனேயே இரக்கம் காட்டுவார். அவர் தரும் தண்டனையை விட அவர் காட்டும் இரக்கம் பன்மடங்கு சக்தி வாய்ந்தது. குற்றம் செய்யும் தன் மக்களைக் கை கழுவி விட வேண்டும் என்று நினைத்தாலும் அவரது பேரன்பு பேரிரக்கம் இதைத் தடுக்கின்றது. தன் மக்களைத் தண்டிக்கும் போதும் அவரது இரக்கம் பிரசன்னமாயுள்ளது.

**அமைதி அருள்வாராக –**

'சாலோம்' என்ற வார்த்தை பொருள் பொதிந்தது. சாபம் மற்றும் போராட்டங்களிலிருந்து பாதுகாப்பான வாழ்வையும், வாழ்வில் நன்மை நடக்கவும், நல்ல அனுபவங்கள் முழுமையாகக் கைகூடவும், உள்ளார்ந்த அமைதியையும் யாராலும் (எந்த சோகத்தாலும்) பறித்துக்கொள்ள முடியாத மன நிலையையும் உருவாக்கி, இந்த அமைதி மற்றவர்களுடன் ஒப்புரவை ஏற்படுத்தி உள்ள உறுதி தருகின்றது. கடவுள் தரும் அமைதி வாழ்வு நோக்கங்களைத் தெளிவாக்குகின்றது. தேவையற்ற சோகத்திலிருந்தும் நிறைவேறாத ஆசைகளுக்கு அடிமையாக இருப்பதிலிருந்தும் விடுதலை தருகின்றது. யோவான் நற்செய்தியில் இயேசு தன் இறுதி நாள்களில் மூன்றுமுறை அமைதியை அருள்கின்றார் (14:27, 16:33, 20:19, 21). கடவுள்மீது நம்பிக்கை கொண்டு வாழும் மக்களே மகிழ்ச்சியோடு இருக்கின்றனர். இது உள்ள நிறைவாகும்.

இந்த உலகம் நல்லதையும் கெட்டதையும் கடந்துதான் ஒவ்வொரு நாளும் முன்னேறிச் செல்கிறது. எத்தனை போர்கள், சுனாமிகள், நில நடுக்கங்கள், இயற்கைப் பேரிடர்கள் நடந்தாலும் இந்த உலகம் இன்றும் நிமிர்ந்து நிற்கக் காரணம் 'இழந்தவைகளையெல்லாம் மீண்டும் நமதாக்கிக் கொள்ளும் சக்தியைக் கொண்டுள்ள இறைவன் நம்மோடு இருக்கிறார்' என்பதுதான்.

நாம் ஒவ்வொருவரும் சக்தி வாய்ந்தவர்கள் எந்தக் கஸ்டமான சூழ்நிலையும் மாறும் அது மேலும் சக்தி வாய்ந்தவர்களாக, பொறுமைசாலிகளாக, எதையும் தாங்கிக் கொள்பவர்களாக, எதையும் சாதிக்கக்கூடியவர்களாக மாற்ற, பலம் பெற்று வாழக் கற்பித்துள்ளது என்ற நம்பிக்கையுடன் உழைப்போம், வெற்றி உறுதி.

→

பிறந்திருக்கின்ற புதிய ஆண்டிலே காலடி வைக்குமுன் இறை ஆசீரைப் பெற்றுக்கொள் வோம். பிறரும் இறையாசீரைப் பெற வழி நடத்திச் செல்வோம். நாமும் பின்வருவது போன்ற வார்த்தைகளைக் கூறி பிறரையும் வாழ்த்தி ஆசீர்வதிப்போம்.

"நீ நன்றாக இருக்கணும்"
"உன்னை நன்றாக கவனித்துக்கொள்"
"பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!"

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!** ■

கிறிஸ்தவம்

## மாணவர் பக்கம்

### டிசம்பர் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 5 | 6) | 2 | 11) | 2 |
| 2) | 3 | 7) | 4 | 12) | 1 |
| 3) | 2 | 8) | 5 | 13) | 5 |
| 4) | 5 | 9) | 2 | 14) | 1 |
| 5) | 3 | 10) | 3 | 15) | 3 |







**அ**ன்ரன் தன் பிள்ளைகளுடன் கதைத்துக்கொண்டிருந்தார். கல்வி, அரசியல், பொருளாதாரம், வெளிவிவகாரம் போன்ற பல்வேறு துறைகளில் பேச்சு சுழன்றுகொண்டிருந்தது. பிள்ளைகளின் வயதிற்கேற்ப அவர்கள் விளங்கக்கூடிய வகையில் விசயங்களைப் பக்குவமாக எடுத்துச் சொன்னார்.

"அப்பா, நான் உயர் வகுப்பில் என்ன துறையில் படிச்சா நல்லது...?" என்று மூத்தவர் கேட்டார்.

"அது உங்கட சுதந்திரம்.... நானோ, அம்மாவோ உங்களக் கட்டாயப்படுத்த மாட்டோம்.... மனதிற்கு என்ன துறை விருப்பமோ அதப் படியுங்க.... நாங்க முழு சப்போட்ட தருவம்...."

"நான் எஞ்சினியராகப் போறன்.... டொக்டராகப் போறன், லோயராகப் போறன் .... எண்டெல்லாம் சொல்லமாட்டன். எனக்குப் பத்திரிகைத் துறைதான் விருப்பம். அது சம்பந்தமாகத்தான் படிக்கப் போறன்...."

"நல்லது .... அதற்கு ஏற்ற துறையை தெரிவு செய்யுங்க .... " என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அன்ரனின் கடைசி மகன்,

"நான் புலனாய்வு அதிகாரியாகப் போறன்" என்றான்.

நான்காம் வகுப்புப் பையனின் கதையைக் கேட்ட அன்ரன் சிரித்துவிட்டார்.

அதற்கு அன்ரனின் ஆறாம் வகுப்புப் படிக்கும் மகள் சொன்னாள்,

"அடேய் தம்பி கவனம்டா .... நீயும் சுவிஸ் நாட்டுக்குப் போகவேண்டி வரும்.... ■■■





■ சார்..... சார்....
என் மனைவியக் காணம் .....

■ யோ ...... இது போஸ்ட் ஒபீஸ் ....

■ அய்யோ.... சந்தோஷத்துல எங்க போறதெண்டே தெரியல .....

✳



**மனைவி :** என்னங்க..... செத்ததுக்கப்புறம் கணவனும் மனைவியும் சொர்க்கத்துல சேர்ந்து வாழ முடியாதாமே!

**கணவன் :** அதனாலதான் அது சொர்க்கம்!





- ப. டெனிஸ்டன்

# உழவனுக்கு உலகு சொல்ல வேண்டும் நன்றிகள் ......

**தை** பிறந்தால் வழி பிறக்கும்
தரணியெங்கும் ஒளி பிறக்கும்
இந்த நம்பிக்கை மட்டுமே நம்மை
இத்தனை வருடங்களாக
இயக்கிக்கொண்டிருக்கிறது.
தை பிறக்கிறது மாசி பிறக்கிறது
போகப்போக மாதங்கள் பிறக்கின்றன
அப்படியே அந்த வருடமுதிர்ந்து
அடுத்த வருடம் பிறக்கிறது
இன்னும் நாம் தை பிறந்தால்
வழி பிறக்குமென்ற நம்பிக்கையுடன் அப்படியே

வேக உணவுக் கலாச்சாரம் விரல் சொடுக்கும் நொடியில்
வேகவைத்து உணவை உண்ண தருகிறது
வேர்வை சிந்தி உழைப்பவன் பாடு வெறும்
காவிய கருப்பொருளில் மட்டும் பாடுபொருள் பெறுகின்றது.
விவசாயம் எம் நாட்டின் முதுகெலும்பு
என்று முழங்குவோர்
விவசாய நாட்டிலே நிழக்கீழ் நீரை உறிஞ்சி
போத்தலில் அடைத்து விற்கின்றார்.
விவசாயிடம் இரண்டு மயிலுக்கு
வாங்கப்படும் நெல்மூடை
அரிசி ஆலையில் அவித்து குற்றி பத்துக்கிலோவாய்
பைகளில் அடைத்தால் ஒரு மூடையின்
விற்பனை பெறுமதி ஐயாயிரம் ரூபாய்கள்
ஆண்டவனுக்கு தான் வெளிச்சம்
விதைத்தவன் வாங்காத இலாபம் விற்பவனுக்கா ...?

தை பொங்கல் புதுப்பானை
புத்தரிசி எல்லாம் புதுசு
ஆனால் விவசாயிகள் பலருக்கு பால் வழியும்
சுபீட்சம் கிடைக்காமல் வெறும் கடமைக்கான
பொங்கலாய் மாறிப்போனதே
நேற்றுவரை உரித்தான நிலங்கள் எல்லாம்
பட்ட கடன் வறுமையால்
வேறவனுக்கு வித்தாச்சு
ஆனாலும் விவசாயம் மறக்காத விவசாயி மீண்டும்
அவன் காணியிலே கூலிக்கு விவசாயம் செய்வான்

ஏர் பிடிக்கும் கைகள் பல தான் இன்று
பேனா பிடிக்கும் கைகளின் பின்னனியை
உருவாக்குகின்றன
ஆனாலும் நன்றி மறக்கும் நவீன மனிதன்
தன் பிள்ளையை பல் துறை வித்துவானாக்க
துடிக்கும் அதேவேளை
விவசாயி எனும் வார்த்தையை இழிசொல் என
கருதுமளவும் மாறிக்கொண்டு வருகிறான்
வரட்சி வயிற்றில் இடிக்கும்
பெரு மழை கதிர் முற்றும் காலத்தில்
மூழ்கடிக்கும்
கபில நிறத்தத்தி வைக்கோலாய் மாறிப்போகும்
என்ன தான் நடந்தாலும்
தோழேற்றிய மண்வெட்டியில் தோல்வி மறைத்து
உலகுண்ண உணவு படைக்கும் சூரியன்
விவசாயியே!

இந்த பொங்கல் நாட்களில் கூடுமானவரை
புதுப்பானை அடுப்பேற்றுவோம் புத்தரிசி
பொங்கிடுவோம்
கரும்பை வேண்டுமானால் கடித்திடுவோம்
கலாச்சார உடைகழனிந்து கொண்டாடுவோம்
வழமையும் பழமையும் மாறாத பொங்கலை
கொண்டாடுவோம்
அதே நிமிடம் உண்ணும் சோற்றுக்காய்
ஒரு கணம் கடவுளுக்கு நன்றி கூறி
உழவனுக்கு நல் சுபீட்சம் கொடு
கடவுளே என்று நச்சரிப்போம்
உயர்தர மேசையில் உணவுக்கு முன்
ஒரு கணம் கண் மூடி செபிப்போரே
உழவனுக்குமாய் மன்றாடுங்கள்......



# மனச்சிறை



கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

அன்று குணம் மாஸ்டருக்கு அவர் செல்லமாக வளர்த்த ஜிம்மி தற்செயலாகக் கடித்து விட்டது. உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலுள்ள பிசியு என்னும் ஆரம்ப சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு கடமையிலிருந்த தாதி ஒருத்தி மிகவும் விரைவாக சிகிச்சையளிக்க ஆரம்பித்தார். மருந்துக் குப்பியில் ஊசியினைச் செருகி மருந்தை ஊசியினுள் உறிஞ்ச வைத்தபடியே,

"ஐயா! இது உங்களுக்கு அலஜிக் இருக்கா எண்டுதான் டெஸ்ட் பண்ணப்போடுறது. போட்ட பிறகு 20 நிமிசம் கழிச்சி உங்கள கூப்பிடுவம்".

மாஸ்டருடன் கதைத்தபடியே ஊசி மருந்து ஏற்றப்பட்டு, ஏற்றப்பட்ட அடையாளத்தைச் சுற்றி பென்னால் ஒரு சிறிய வட்டம் அவரது கையில் வரையப்பட்டது.

"சரி ஐயா! முன்னால இருக்குற கதிரயில போய் இருங்கோ"

தாதியின் அன்பு கலந்த அறிவுறுத்தலைத் தொடர்ந்து குணம் மாஸ்டர் அங்கிருந்த கதிரையில் போய் அமர்ந்தார்.

அப்போது அவருக்கு முன்னால் ஒரு இளம் தாய் தனது குழந்தையினை தோளில் படுக்க வைத்தபடி தனக்கு முன்னால் இருந்த நீல நிறமான பிளாஸ்டிக் கூடையினைத் தூக்கி எடுக்க முற்பட்டாள்.

இதைப் பார்த்த மாஸ்டருக்கு கடந்த 38 வருடங்களுக்கு முன்பாக தனக்கு ஏற்பட்ட மறக்கமுடியாததும், விரும்ப முடியாததும், யாரிடமும் மனம் விட்டுச் சொல்ல முடியாததுமான அந்நிகழ்வு புலனாகியது.

• • •

அன்று காலை குணம் மாஸ்டர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த, உறவினர் ஒருவரைப் பார்த்து விட்டு, வைத்தியசாலையின் பிரதான வாசல் வழியாக வெளியேறச் சென்று கொண்டிருந்தார்.

வாசலருகே இளந்தாயொருத்தி தனது தோளில் சிறுமி ஒருத்தியைத் தலைப்பகுதியை ஒரு துவாயால் மூடியபடி, தூக்கியபடி நின்றவள், தனக்கு முன்பாக சுடுதண்ணீர் போத்தல், சிறிய கோப்பை இவைகளால் நிரம்பியிருந்த அந்த பிரம்பினாலான கூடையொன்றினைத் தனது காலால் கொழுவி எடுக்க முனைந்தபோது, குணம் மாஸ்டர் தானே அக்கூடையினை எடுத்து அத்தாயிடம் கொடுக்கையில்,

"என்னம்மா? பிள்ளைக்குச் சுகமில்லையா...?" எனக் கேட்டபோது,

"இல்லய்யா எண்ட புள்ள செத்துப்போச்சி!"

என வாய்விட்டழமுடியாதவளாகத் தனக்குள்ளே அழுதபடி சொன்னாள்.

மாஸ்டருக்கு நம்பமுடியாதபடி இருந்தது. இப்படியான சோகச்சுமை நிறைந்த தாயொருத்தி வாய்விட்டழ முடியாத நிலையில் நிற்கின்றாளே என்ன கொடுமை நடந்ததோ? என நினைத்த மாஸ்டர் ஏதோ அச்சிறுமியைப் பற்றிக் கேட்டறிய முயற்சிக்க முன்னரே.....



"நானையா, நேத்துப் பின்னேரம் ஊரில இரிக்கிற ஆசுவத்திரிக்குப் புள்ளயக் கொண்டு போன. அங்க பாத்துப்பொட்டு அம்புலன்சில இஞ்ச கொண்டு வரக்க ஒரு பத்து பத்தர மணி இருக்கும். வாட்டு வாசலால போகக்குள்ள எண்ட குஞ்சு, செத்துப் போச்சையா! ராவே சொல்லித்தாங்க...."

"நீ விடியவும் நேரத்தோட சுகமில்லாத புள்ள மாதிரி உண்ட ஊருக்கு எப்படியாவது கொண்டு போய்ச்சேரு".

"எண்ட தலையெல்லாம் வெறச்சிப்போச்சையா? புறகு செத்த எண்ட மகள மடியில வளத்திட்டு விடியமட்டும் ஆஸ்பத்திரி விறாந்தையில் இருந்தனான். இப்ப எண்ட புள்ளய ஊட்ட கொண்டு போறதுக்கு ஒரு வழியுமில்லாம இருக்கன்".

மாஸ்டர் அப்பெண்ணிடம்,

"யோசிக்காதீங்க. நடந்தது நடந்து போச்சு! என்ன செய்யிற! இப்பிடியெல்லாம் வாறதுதான். வாறத்த நீங்க மட்டுமில்ல. ஆரெண்டான சந்திச்சி ஏற்றுக்கொள்ளத்தானே வேணும்."

மாஸ்டரின் வார்த்தைகளால் அத்தாய் சற்று மௌனமாகி பெருமூச்செறிந்தாள். மாஸ்டர் மீண்டும் அத்தாயிடம்,

"எந்த வாகனத்திலும் உரிய கடிதமில்லாம சவத்த ஏத்த மாட்டாங்க. நானொண்டு சொல்றன். உங்களுக்கு விருப்பமென்டா என்னோட மோட்டசைக்கிள்ள வாங்க, பிள்ளய நடுவில் வச்சி கொண்டு போய் உங்கள விடுறன்".

'தனது மகளைக் கொண்டு சேர்ப்பதற்கு யாரெண்டாகிலும் உதவ மாட்டார்களா?' என ஏங்கிய இவளுக்கு குணம் மாஸ்டரின் வார்த்தையினை பெரிதாக ஏற்றுக்கொண்டாள்.

ஹெல்மேட் அணியாத காலமது. இந்திய அமைதி காக்கும் படையினர் சில இடங்களில் கால்நடையாகச் சென்று கொண்டிருந்தனர். சில இடங்களில் கவச வாகனங்கள், துருப்புக்காவி றக் வண்டிகள், அவர்களை முந்திச்செல்ல குணம் மாஸ்டர் வெகு நிதானமாக தனது கோட்டார் சைக்கிளைச் செலுத்திக்கொண்டிருந்தார். அப்பதட்டம் நிறைந்த பயணத்தின்போது இந்திய அமைதி காக்கும் படையினரின் சோதனைச் சாவடிகளில் சற்று தரித்து, தாமதித்தே செல்ல வேண்டிய நிலை. ஆனால் குணம் மாஸ்டரின் மோட்டார் சைக்கிள் வண்டியோ இரண்டு உயிருடன் உள்ளோ ரையும், உயிரற்ற உடலொன்றையும் சுமந்தபடி பயணித்துக் கொண்டுள்ளதே, இது சோதனைச் சாவடிகளில் கண்டுபிடிக்கப்பட்டால், என்ன நடை பெறும்! என்பதை குணம் மாஸ்டருக்கு கற்பனை செய்து பார்க்கும்போது, பயமாக இருந்து கொண்டே இருந்தது.

தூரத்தே தெரிந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் சோதனைச் சாவடியை சில நிமிடங்க ளில் குணம் மாஸ்டரின் மோட்டார் சைக்கிள் சென்றடைந்ததும், அதனை ஒரு சீக்கிய இராணுவ வீரன் நிறுத்தி விட்டு மோட்டார் சைக்கிளை நோக்கி வருகின்றான். எப்படியாவது, அவனது உயரம் ஆறு அடி வரையாவது இருக்கும். சிவந்த முகம் கருமையும், அடர்த்தியான முறுக்கி விட்ட மீசை, கட்டையாக கத்தரித்த அவனது தாடி, நேர்த்தியாக சுற்றிச் சுற்றி வளைந்து கட்டிய தலைப்பாகை, தோளிலே தொங்கிங்கொண்டிருந்த துப்பாக்கி, அவன் எதிரிகளுடன் போரிடுவதற்கு அவன் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கி தேவையில்லை. அவனது முறுக்கேறிய இரண்டு கைகளுமே போமென குணம் மாஸ்டர் நினைத்திருக்கலாம். ஆனால் அவரது நினைவோ, சில வினாடிகளில்தான் அந்த சிப்பாயிடம் வகையாக மாட்டிக்கொள்ளப்போவது பற்றியதாகவே இருந்தது.

நெருங்கி வந்த சிப்பாய் நின்று விட்டான். வைத்தியசாலையில் வைத்து குணம் மாஸ்டர் நினைத்தது போன்று அவனும் நினைத்துவிட்டான். மேலும் போகும்படி கையினால் சைகை காட்டினான் இப்போதுதான் குணம் மாஸ்டருக்கு போன உயிர் வைத்தமாதிரி சைக்கிள் பயணம் தொடர்கின்றது.

கல்முனை நகரம்! வழி தெரியாத குணம் மாஸ்டர்! வழி தெரிந்த தாய்! "அந்தா! அந்த வஸ் திரும்பிப்போற றோட்டாலதானையா முடங்கிப் போகணும்".

அதன்படி மோட்டார் சைக்கிள் பயணம் செய்து 15 நிமிடம் கழிந்த நிலையில் கட்டுப்பாடற்ற பிரதேசத்தினூடாக பயணிக்கின்றனர்.........

→



# மனித வாழ்க்கை சுமையில்லாமல் இருக்க ...



ஜே. எச். இரத்தினராஜா

பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் இரு பக்கங்கள். இதனிடையே எத்தனையோ மாற்றங்கள் தோன்றுகின்றன. பிறந்தோம், வளர்ந்தோம், உழைத்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இந்த மனித வாழ்க்கை ஒரு சக்கரம் போல சுழலுகின்றது. ஒரே பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் சக்கரம் திடீரென்று மாற்றங்களைச் சந்திக்க நேரிடும்போது தடுமாறுகிறது. இந்த தடுமாற்றத்தை நீக்கி மனப்பக்குவத்தோடு மாற்றங்களை ஏற்றுக்கொண்டு திறமையாக வாழ்க்கைச் சக்கரத்தை தடம் புரளாமல் ஓட்டும் மனிதன் வாழ்க்கையைச் செம்மையாகப் புரிந்து கொண்டு வாழ்கிறான் என்று சொல்லலாம்.

வாழ்க்கையைக் காலத்தோடு ஒப்பிடும்போது வாழ்க்கை அவ்வளவு முக்கியமானதாகத் தோன்றவில்லை. எத்தனையோ காலங்கள் ஓடிவிட்டன. இன்னும் எத்தனையோ காலங்கள் ஓடவேண்டும். பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையேயுள்ள காலத்தில் இந்த மனிதனின் வாழ்க்கை எத்தனை வகையில் மாறுபடுகின்றன. மனிதன் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு அனுபவத்தைப் பெறுகிறான். இந்த அனுபவம் அவனுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் பாடமாக அமைந்து விடுகிறது.

இந்த இரண்டு காலச் சக்கரங்களுக்கிடையே மனிதன் அகம்பாவம், கோபம், கெட்ட அதிர்வலைகள் போன்ற குணங்களுக்கு அடிமையாகிறான். அகம்பாவம் மனிதனின் சுயரூபத்தை அழித்து அவனைத் தனிமையாக்குகிறது. "தான் என்ற எண்ணம் கொண்ட மனிதன் என்றும் வாழ்ந்ததில்லை" என்ற பாடலின் வரிகள் இன்றும் நினைவுக்கு வருகின்றன. அகம்பாவத்தால் மனிதன் மகிழ்ச்சியைத் தொலைக்கிறான். வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களில் சில இனியதாகவும் இருக்கிறது. கெட்டதாகவும் நடக்கிறது. இரண்டையும் மனிதன் ஒன்றாக எடுத்துக்கொண்டு வாழ்க்கையை சாதாரணமாக வாழ கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியான சம்பவங்கள் மட்டும் நிகழ்ந்து கொண்டிருந்தால் வாழ்க்கை அவ்வளவு சுவையாகத் தோன்றாது. அவ்வப்போது பிரச்சினைகளும் தோன்றினால்தான் வாழ்க்கையில் அதனை சமாளிக்கும் தன்மையும் மனிதனுக்குள்ளே பிறக்கும்.

நேற்று என்ன நடந்தது என்கிற கடந்த கால நினைவுகளிலும், நாளை என்ன நடக்கும் என்கிற எதிர்பார்ப்புகளிலும் மனிதன் பெரும்பான்மையான நேரங்களை வீணாகக் கற்பனையிலேயே செலவிட்டு நிகழ்கால வாழ்க்கையை மறந்து விடுகிறான். கடந்த கால வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை நம்மைச் செயல்பட விடாமல் முடக்கிப்போட்டு விடுகிறது. வாருங்கால வாழ்க்கையைப் பற்றிய அதிகமான சிந்தனை மனிதனின் வாழ்க்கையை ஒரு போராட்டமாக்கிவிடுகிறது. நிகழ்கால வாழ்க்கையின் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் தொலைத்து இந்த வாழ்க்கையை ஒரு சுமையாகவே சுமக்கத் துவங்கி விடுகிறான்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற பழமொழியை சொல்லிக் கேட்டிருப்போம். மனிதனின் மனம் தெளிவாகவிருந்தால் அதனுடைய மகிழ்வுகள் முகத்தில் தோன்றும். மனம் நொந்து போயிருந்தால் முகம் வாடி வதங்கித் தோன்றும். ஒரு மனிதனின் மகிழ்ச்சி அவனைச் சார்ந்திருப்பவர்களையும் மகிழ்ச்சி அளிப்பதுடன் அவர்களுக்கு தன்னம்பிக்கையையும், தெம்பையும் கொடுக்கிறது. இது தெரியாமல் மனிதன் சின்ன சின்ன விஷ

யங்களுக்கு கோபம் கொண்டு முகத்தைச் சுருக்கி, மனதைக் கனமாக்கி தனிமையைத் தேடுகிறான். உடனிருப்பவர்களையும் கவலைக் கடலில் ஆழ்த்தி விடுகிறான். மனிதனின் மனம் வாழ்க்கைப் போராட்டத்தால் உளைச்சல் அடைந்தால் அமைதியைத் தேடி அலைகிறது. இந்த அமைதியைத் தியானம் தருகிறது. இது உடல் நலம், அமைதி, அச்சமின்மை போன்றவற்றை அளிக்கிறது.

ஊக்கமில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கை இல்லை. வாழ்க்கையின் மீது மனிதன் நாட்டம் கொண்டு வாழ்க்கையின் ஒவ்வொரு பொழுதையும் மகிழ்ச்சியாகக் கழிப்பவன் தன்னுடன் சுற்றுச் சூழலையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்கிறான். மற்றவரின் செயலை மனதார பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவரின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டும். இந்தச் சின்ன மாற்றம் மற்றவர்களின் அன்பையும், பாசத்தையும் அவனுக்குப் பெற்றுக் கொடுக்கிறது.

மனிதன் முதலில் தேவையற்ற நிகழ்வுகள், வீண் வம்பை வளர்க்கும் நிகழ்வுகள் போன்றவற்றைத் தவிர்க்கப் பழகவேண்டும். நம்மைவிட அதிகமான கருத்துக்கள் தெரிந்தவராயிருந்தால், அவர் தம்மைவிட எளிமையானவராகவோ அல்லது வயது குறைவானவராகவோ இருந்தாலும் கூட அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும். இதுபோல் நமக்குத் தெரிந்த கருத்துக்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளவும் வேண்டும்.

காலத்தோடு தோன்றும் மாற்றங்களை மனிதன் மனப்பக்குவத்தோடு, மனம் திறந்து ஏற்றுக்கொண்டு வாழவேண்டும். ஒரே மாதிரியான வாழ்க்கையினால் மனிதன் அவ்வப்போது சலிப்படைகிறான். இதனால் அவ்வப்போது மனிதன் அதற்கேற்ற மாற்றங்களை உருவாக்கிக்கொள்வதுடன் வாழ்க்கையில் வரும் எந்த மாற்றங்களையும் வரவேற்கப் பழகிக்கொள்ள வேண்டும். மாற்றம்தான் ஏமாற்றத்தைத் தவிர்க்கும். இந்த மனித வாழ்க்கையும் சுமையில்லாமல் சுகமாய்த் தோன்றும்.

மோட்டார் சைக்கிளுக்கும், குணம் மாஸ்டருக்கும் அந்த தாய்க்கும் இடையில் இருந்த பிள்ளையின், உடல் நன்றாக விறைத்து விட்டது. அப்பிள்ளையின் கைகள் இரண்டும், மோட்டார் சைக்கிள் ஓடி வீதியுள்ள பள்ளம், மேடுகளால் செல்லும்போது விறைத்துப்போன அந்த பிஞ்சுக்கரங்கள் குணம் மாஸ்டரின் இடுப்புப் பகுதியில் படும்போது குணம் மாஸ்டரின் கண்களால் நீர் வழிந்ததை அவர் மட்டுமே அறிவார்....

'அமேசன் காட்டில் அழகன் பூசாரி' என்ற சிறுகதைத் தொகுதியல் இடம்பெற்ற கதை.

தொண்டனில் ஆக்கங்களைத் தரும் கலைக்கோட்டன் ஆ. இருதயநாதன் அவர்கள் எழுதிய 'அமேசன் காட்டில் அழகன் பூசாரி' என்ற சிறுகதைத் தொகுதி இலங்கை தேசிய மட்டத்தில் விருது பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

- தொடரும் .....





டாக்டர்: டிவி அதிகமாகப் பார்ப்பீங்களா?

நோயாளி: இல்ல டாக்டர் ஒரே ஒரு டிவியைத்தான் பார்த்துக்கிட்டே இருப்பேன்

"பொண்ணு பார்க்கிற இடத்துல எதுக்கு உருட்டுக் கட்டையோட ஆட்கள் நிக்கறாங்க?"

"பொண்ணு பார்த்திட்டு புடிக்கலைன்னு சொல்லிப்பாருங்க அப்ப புரியும்!"



ஆகவே இப்புதிய வருடத்தில் நாம் சுமையில்லாமல் சுகமாக வாழ, மாற்றங்களை உருவாக்கி எமது வாழ்க்கையை மகிழ்வுடன் வாழ கற்றுக் கொள்வோம். வாழ்க வளமுடன். ■

# ஏதோ சொல்லணும்னு தோணிச்சு!! 04



• அருட்பணி. P. ரமேஷ் கிறிஸ்டி

முன்பொரு காலத்தில் அந்த பருமனான உடலமைப்பைக் கொண்ட வாலிபனின் தொழில் ஒரு கரையில் நிற்கும் பயணிகளை ஒருவர் ஒருவராக, வைத்துத் தன் தோளில் சுமந்து ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ப்பதுதான்.

ஒருநாள் அழகான சிறுவன் ஒருவன் கரையோரமாக நிற்பதைப் பார்த்த வாலிபன் குனிந்து அவனைக் காக்க எத்தனித்தபோது, அந்த சிறுவன், ''என்னுடைய பாரத்தை உன்னால் சுமக்க முடியாது" என்று எச்சரித்தான். "என்ன பேச்சு இது. உன்னை விட பல மடங்கு பருமனானவர்களையே சுமந்திருக்கிறேன். நீ ஒரு பொடிப் பயல்" என்று சொல்லிச் சிரித்தான். "அப்படியானால் உன் இஸ்டம்" என்று சொல்லிய சிறுவனை தூக்கித் தோள்மீது வைத்து ஆற்றுக்குள் அசால்ட்டாக இறங்கினான் வாலிபன்.

நேரம் ஆக, ஆக அந்த பையன் சொன்னது போல அவன் பருமன் பாரமாக மாறியது. வாலிபனால் சுமக்க முடியவில்லை. விசாரித்த போது சிறுவன் சொன்னான், "என் பெயர்தான் இயேசுக் கிறிஸ்து. நான் என்னோடு சேர்த்து இந்த உலகத்தின் பாவங்களையும் என்மீது சுமந்து கொண்டிருக்கிறேன். அதுதான் உன்னால் என் பாரத்தைத் தாங்க முடியவில்லை. இனி உன்னுடைய பாவத்தையும் நானே சேர்த்து சுமப்பேன்" என்று அன்று அந்த வாலிபனாக இருந்த கிறிஸ்தோபரிடம் இயேசு கூறியதாகவும், இந்த கிறிஸ்தோபரே பின்னைய நாட்களில் புனித கிறிஸ்தோபராக அழைக்கப்பட்டதாகவும் வேத வரலாறுகள் கூறுகின்றன.

இந்த சம்பவம் கற்றுத்தரும் பாடம், என்னுடைய சுமை என்று எதை நீங்கள் எண்ணி கவலைப்படுகிறீர்களோ அதனையும் சேர்த்து சுமந்து கிறிஸ்தோபருக்கு இளைப்பாறுதல் கொடுத்த கிறிஸ்து உங்களுக்கும் இளைப்பாறுதல் தருவார் என்று. இதனைத்தான் மத் 11:28ல் 'நாம் பெறுகின்றோம். சுமையோடு இருப்போரே என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகின்றேன்."

எல்லோருக்கும் இளைப்பாறுதல் தேவை. இதற்காகத்தான் சிலர் தனியாகவோ, குடும்பமாகவோ விடுமுறை எடுத்துக்கொள்கிறார்கள். என்னதான் விடுமுறை எடுத்து வெளி இடங்களுக்கு இளைப்பாறச் சென்றாலும் முக்கியமாக laptop, Mobile Phone இரண்டையும் மறக்காமல் எடுத்துக்கொண்டுதான் போகிறோம். சமயங்களில் ஒரு மாலை வேளையில் கடற்கரையில் குடும்பமாக ஒன்றாகச் சேர்ந்திருந்து சந்தோசமாகப் பேசுகின்றோம். அதுக்குப் பேர் இளைப்பாறுதலாக இருக்கலாம். ஆனால் என்ன, ஒன்றாக இருக்கிற ஒவ்வொருவருடைய கையிலும் கைத்தொலைபேசி வைத்துக்கொண்டு எங்கோ இருக்கும் யாரோ ஒருவருடன் பேசிக்கொள்கிறோம். கடற்கரையில் ஒன்றாக இருந்தாலும் அன்னியமாகப் போய்விடுகின்றோம்.

இன்னுமொரு விடயம் உங்களிடம் கேட்க வேண்டும். நாமெல்லாம் மொஸ்க்கும், கோவிலுக்கும், ஆலயங்களுக்கும் கடவுளிடம் பேசத்தானே போகின்றோம். பின்னர் எதற்கு கைத்தொலைபேசி? இதில் Sign Board வேறு கைத்தொலைபேசி பாவிக்க வேண்டாம் என்று. நாமெல்லாம் எங்கு சென்றுகொண்டிருக்கிறோம்....?

அன்றும் அப்படித்தான் ஆலயத்தில் திருமணம் ஒன்று நடந்தது. தாலி கட்டும் நேரத்தில் மணமக்க ளின் வாக்குறுதிகளை நான் கேட்டுக்கொண்டிருக் கின்றேன். அந்தநேரம் பார்த்து மணமகனின் அலைபேசி சிணுங்கியது. இதில் சிரிப்பதா...? அழுவதா ....? என்று சொல்லமுடியாதவாறு மாப்பிள்ளை செய்த காரியம் இருந்தது. அலைபேசி அடித்ததும் அதை எடுக்க பொக்கெற்றுக்குள் கைவிடப் போனார். பின்னர் யோசித்திருப்பார் போல 'அய்யய்யோ.... இங்கெல்லாம் phone பேசக்கூடாது' என்று. பின்னர் அதை முற்றாக நிறுத்தி வைத்துவிட்டார். நல்லவேளை, "Excume Father, தாலிய வச்சுக்கொள்ளுங்க, இதோ 5 minutes ல வாறன்" எண்டு சொல்லாமல் விட்டார். அந்தளவிற்கு நாம் இன்னும் வரவில்லை. அதற்கா கக் கடவுளுக்கு நன்றி சொல்வோம்.

இப்படியெல்லாம் பேசுவதால், தொழில்நுட்பத் தையோ அலலது யாரையோ குறை சொல்வதாக நினைத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால் உண்மையைப் பேசினாலே அதைக் கறையாகத் தான் யோசிக்கின்றனர்.

இளைப்பாறுதல் என்பதற்கான அர்த்தத்தை இணையத்தில் தேடிப்பார்க்கின்றபோது 'எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு ஓய்வாய் இருந்து இழந்துபோன பலத்தைத் திரும்பப் பெறுவது' என இருந்தது.

இதைத்தான் இன்றைக்கு இயேசு கூட சொல் வார், 'என்னிடம் வந்து என் சமூகத்திலே இளைப் பாறுங்கள். உங்கள் பலத்தை புதுப்பித்துக்கொள் ளுங்கள்'.

நண்பர்களே, வாழ்க்கையில் நிறைய காரியங் களை தலையில் போட்டுக்கொண்டு நேரமின்றித் திரியாதீர்கள். உங்களுக்காக கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள். உங்கள் குடும்பம், நட்பு வட்டாரம் என நேரத்தை மகிழ்ச்சியாகவும், ஓய்வாகவும் கழியுங்கள்.

கோவில், மொஸ்க், ஆலயம் என சென்று கடவுளிடம் கொஞ்சமாவது பேசுங்கள். இழந்த பலத்தைப் பெற்று இளைப்பாறி வாருங்கள்.

என்ன நான் சொல்வது....?

## வினா விடைப் போட்டி - இல 20

**சரியான விடைகள்**

1. இனிமையான வார்த்தைகளும், பணிவான நடத்தையுமே ஒருவருக்கு சிறந்த அணிகலன்.
2. - பிரான்சிஸ்கன் மரியாள் சபை குருக்கள்
   - சில்த்தோர் ஆசீர்வாதப்பர் சபை குருக்கள்
   - பெல்ஜியத்தைச் சேர்ந்த இயேசு சபை குருக்கள்
   - பிரான்சை சேர்ந்த அமலமரித் தியாகிகள்
3. ஈடன் (Eton) பள்ளியில், இரசாயனப் பாடம் (Chemistry)
4. மரியா வழியாக மகிழ்ச்சி, நீதி, நம்பிக்கை மற்றும் மீட்பின் ஒளி பிறக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை
5. அசிட் நிறைய சுரந்திருக்கும். எனவே, காலை யில் சரிவர சாப்பிடாமல் பழகிவிட்டால் வயிற்றில் புற்றுநோயை உருவாக்கும்.
6. இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு / யூத மரபிலிருந்து
7. 'நான் நற்செய்தி அறிவிக்கின்றேன். என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு"
8. அந்தியோக்கியா இன்னாசியார், பர்னபாஸ், ஹேர்மஸ் ஆயர் போன்றோர்.
9. வயல்வெளிகளையும் / படைத்தவரின்
10. ரோஜர்ஸ் என்கிற அறிஞர்

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*

- **சுரேஸ்கரன் யேருசாலி,**
  சித்தி விநாயகர் குறுக்கு,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.

- **வைரமுத்து பூமணி,**
  பிரதான வீதி,
  திருக்கோவில்.

- **திருமதி. பத்மாமேரி இரத்தினசாமி**
  இல. 133A, அம்மன் கோவில் வீதி,
  கல்முனை - 01.



# பயணம்

பைந்தமிழ்க்குமரன் டேவிட்

சிறுகதை



கறுப்பு, பச்சை, மஞ்சள் ஒழுங்கின்றிக் கலந்த காக்கியுடைகள் கையில் ஆயுதங்களு டன் அங்குமிங்கும் திரிகின்றன. ஆளுயரத் திற்கு மண்மூடைகள் அடுக்கி மரக் குற்றிகள் இறுக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களினுள் ஊடுருவிப் பார்த்தபடி ஒரு சோடிக் கண்கள். துப்பாக்கி குழல் அசையும். திரும்பிப் பார்க்கவே பயம் வரும். இடது பக்கமாக, நீளமாக அமைக்கப்பட்ட நிரைகள் முடிவில் சோதனைச் சாவடி. பஸ் வண்டி நிறுத்தப்பட் டது. எல்லோரும் தத்தம் பயணப் பைகளை எடுத்துக்கொண்டு கையில் அடையாள அட்டையுடன் நிரையாக வருகிறார்கள். பாடக் குறிப்பு, பாடத் திட்டம், அதிபரிடம் ஒப்படைக்க வேண்டிய அறிக்கை, பேனா, பென்சில், கைக்குட்டை, பனடோல், சீப்பு இவைகள்தான் அந்தக் கைப்பையில் இருந்தன.

அவள் நடக்கின்றாள். முன்னால் சென்ற ஒவ்வொருவராகக் கடந்து செல்ல அவளுடைய முறை, உரமேறிய தடித்த கைகள் கொண்டவள் அந்த சீருடைப் பெண். முறைத்துப் பார்த்தபடியே பையை துழாவியபடி அடையாள அட்டையைப் பிடுங்கி அயலில் நீட்டினாள். அவன் பெயரை உச்சரித்தான்.

"பி...ரி...ய லதா" என்று படித்தவன் நிமிர்ந்தான். அவளும் தலையைத் திருப்பினாள். ஆச்சரியம் ஒரு நிமிடம் திகைத்துப் போனாள்.

"ரஜீவன்...." என்றபடி ஒரு எட்டு முன்னே சென்றவள், அவன் சீருடைக்காரன் கைகளில் எந்த வினாடியும் இயங்கத் தயாரான நிலையில் துப்பாக்கி தடுமாற்றம் நீங்க ஒருவாறாக தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். அதே முகம், அதே உடல்வாகு, உயரம், கூர்மூக்கு, மாநிறம், குறுகுறு வென்ற கண்கள். "த்...தம்பி...." என்று அழைத்துவிட்டாள்.

அவனோ, "அக்கா...." என்றான்.

அவன்.... அவனா .... அவளை அக்கா என்று ... என்றான். எவ்வளவு தெளிவான உச்சரிப்பு; இருக்காது.... அவர்கள் 'அக்கே' என்றுதானே அழைப்பார்கள். ஒருவேளை தமிழ் படித்திருப்பானோ....?

"அக்கா .... பேரு ..... லதா .... சரியா....." என்றான். அவள் தலையசைத்தபடி அவன் நீட்டிய அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு நடந்து பஸ்ஸில் ஏறிவிட்டாள். மனம் தவித்துக் கொண்டிருந்தது.

ரஜீவன் அவளின் ஒரே தம்பி. அம்மா சாகும்போது அவனுக்குப் பதினைந்து வயது. அந்தப் பிரிவை அவனால் தாங்கமுடியவில்லை. துடித்து துவண்டு வாடிக் கிடந்தவனை தேற்றியவள் அவள்தான். அக்கா என்பதை மறந்து அன்று முதல் அவனுக்கு அம்மாவானாள். 'அக்கா பசிக்குதக்கா....' என்று அவன் சிணுங்கினால் அவள் துடித்துப் போவாள். ஐந்தாறு வருடங்கள் கண்மணிபோல அவனைக் காத்து வழிகாட்டி பராமரித்தவள். அந்த நாள் .... அதே நாள் .... இந்த முகம் .... இதே முகம்தான் அவனை அள்ளிக் கொண்டது இல்லை விழுங்கிக் கொண்டது; அவன்

முகவரியைத் தொலைத்தது. பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுவிட்டான். அதற்கான பதிவை செய்ய வேண்டும்.

“அக்கா மிதுஷனோட போயிட்டு வாறனக்கா....” அவள் கொடுத்த இடியப்பப் பார்சலோடு போனவன் இந்த முகாமில் இறங்கியவன் பின் தொலைந்து போனான். காணாமலாக்கப்பட்டோர் பட்டியலில் அவன் பெயரும் சேர்க்கப்பட்டது. தேடினாள்... ஓடினாள் ..... அழுதாள்..... மன்றாடினாள் .... எந்தப் பயனுமே இல்லாது போய்விட்டது.

வருடங்கள் பல கரைந்து போனது. ‘அக்கா .... அக்கா ....’ என்று வாய் ஓயாமல் அழைத்துக்கொண்டு அவளைச் சுற்றிவந்த தம்பி உள்ளத்தில் உறைந்து கிடந்தான்.

சில நாட்கள் கடந்தன. மீண்டும் அதேயிடத்தில் அவன் நின்றான். கண்டதும், “லதா அக்கா ...” என்றான். அவள் உள்ளத்தில் இறங்கி கசக்கிப் பிழிந்து, அவளை உலுப்பியது அந்த ‘அக்கா’ என்ற அழைப்பு. கண்ணீர் துளிர்க்க, “தம்பி” என்றாள். தன் பையில் இருந்த பர்சை எடுத்தான். அதனுள் ஒரு போட்டோ. தன்னுடைய படமா என அயர்ந்து போனவள், “இது... இது.... எங்கட அக்கா சோமலதா .... நா ..... லதா.... சொல்லி .... கூப்புடு.... நீங்க .... ஏ .... லதா அக்கா மாதிரிதானே” அவனின் அரைகுறை தமிழில் அழுதேவிட்டாள். அவனில் தன் தம்பியை அவள் காண, அவனோ தன் அக்காவை காண்கிறானா என்னே விந்தை..... கண்ணீரைத் துடைத்தவள் வேகமாக நடந்து பஸ்ஸில் ஏறியபோது “அக்கா லதாக்கா ....” என்று அழைத்தபடியே பின்னால் வந்த அவன்,

“அக்கா பயம் வாணா .....” என்றபடி அவளின் அடையாள அட்டையை நீட்ட கண்கள் பனிக்க கனிவோடு பார்த்தாள். பாசம் ததும்பிய கண்கள் அவை. அடுத்து வந்த நாட்களில் அந்தச் சோதனைச் சாவடியில் அவன் அவளுக்காகவே காத்து நின்றான். அன்றும் அப்படித்தான் நின்றான். அவள் சற்று நொண்டியபடி நடந்து வந்தாள்.

“அக்கா .... என்னா ....” வாஞ்சையோடு விசாரித்தான்.

“சின்ன .... ஆணி .... குத்திப்போட்டுது”

“ஐயோ..... ஏன் ... பஸ் .... இறங்கினது” அவன் பதறியபடியே அருகில் வந்தபோது தன் தம்பியின் பாசத்தை அந்தத் தவிப்பில் கண்டாள். அந்த முகத்தை ஊடுருவிப் பார்த்தாள். கண்களில் ஒரு ஏக்கம் நிழலாடிக் கிடப்பதைக் கண்டாள்....

“தம்பி ... வெயா இஸ் யுவ சிஸ்ரர...” என்றபோது அவன் கண்கள் கலங்கி பெருமூச்சு வெளிப்பட இரு கைகளையும் குவித்து தலையை உயர்த்தி வான் நோக்கி காட்டியபடி இறங்கிச் சென்றான். பிரமை பிடித்தவளாய் உறைந்து விட்டாள் லதா.

இந்தத் துப்பாக்கி மனிதர்களுக்குள்ளும் இதயம் இருக்கலாம். அந்த இதயங்களில் கொஞ்சமேனும் ஈரமும் இருக்கலாம். அப்படியானால் இந்தக் கொலைக் கலாச்சாரம் மட்டும் எப்படி நுழைந்தது? ஒரு இனத்தை மற்றொரு இனம் குதறிப்போடும் குரோத மனப்பான்மை எப்படி பரவியது?

இந்த முகாமில் தம்பி என்ன ஆனான்...? பாவம் அவன் எப்படி பதறியிருப்பான்? ‘அக்கா .... அக்கா ....” என்று அழுதிருப்பான்... துடித்திருப்பான் .... உயிர் மூச்சு ஓயும்போது கூட .... ‘அக்கா ....’ என்று .... கண்கள் மடையுடைந்து கண்ணீரைக் கொட்டின. பஸ் நகர்ந்தது. அவளுடைய சாயலில் இறந்துபோன தன் சகோதரியைக் காண்கின் றான் அவன். காலம் காவு கொண்ட தன் தம்பியை அவன் முகத்தில் பார்க்கின்றாள் அவள். இது உண்மையா .... வெறும் பிரம்மையா .....?

அடுத்த நான்கு நாட்களாகக் காய்ச்சல் வாட்டியது. உடல் அனலாகக் கொதிக்க தலையிடியுடன் சுருண்டு கிடந்தாள்.



இண்டைக்கு எப்படியாச்சும் ஸ்கூல் போய் வரவேணும். புறப்பட்டாள். அதோ முகாம் நெருங்குகின்றது. பஸ் வண்டி ஒய்வாகு முன்பே கண்கள் அவனைத் தேடின. தினமும் காலையில் அந்த பஸ் வண்டிக்காகத் தவம் கிடக்கும் அவன் இல்லை. 'அக்கா' என்று அழைக்கும் குரல் கேட்கவில்லை. தான் வராததால் எதிர்பார்த்து ஏமாந்துவிட்டானோ.... இடமாற்றம் வந்து வேறு எங்காவது சென்றுவிட்டானோ .... விடை தெரியா வினாக்களுடன் தவித்தாள். தொண்டை வரண்டு கிடந்தது. மெல்ல நடந்து அடையாள அட்டையை வாங்கியவள் சுற்று முற்றும் ஆவலுடன் பார்த்தாள். கண்கள் அவனுக்காக அலைந்தன. அவனோடு சிரித்து சதா அவனைச் சீண்டியபடி நிற்கும் அவன் நண்பன் எங்கோ வெறித்தபடி நிற்கின்றான். அவனருகே சென்று, "சோமசிறி .... சோமசிறி ...." என்று கேட்டாள்.

**"இந்த துப்பாக்கி மனிதர்களுக்குள்ளும் இதயம் இருக்கலாம். அந்த இதயங்களில் கொஞ்சமேனும் ஈரமும் இருக்கலாம். அப்படியானால் இந்தக் கொலைக் கலாச்சாரம் மட்டும் எப்படி நுழைந்தது ? ஒரு இனத்தை மற்றொரு இனம் குதறிப்போடும் குரோத மனப்பான்மை எப்படி பரவியது ?"**

"உங்கட கொட்டி வெச்ச விம் வோம்ப வெடிச்சி சோமசிறி செத்து போச்சி...." கண்கள் குளமாக விரக்தியோடு கூறியவன் வெறுப்புடன் விலகி நடந்தான். நேற்றிரவு ரோந்து சென்றவர்களில் ஒரு இராணுவ வீரன்நிலக் கண்ணியில் சிக்கி இறந்ததாக காலைச் செய்தி கூறியதே .... அது ... சோசிறியா....?

"அக்கா...." என்றழைக்கும் குரல் ஓய்ந்து போனதா ....? மனம் உடைந்து நொருங்கிப் போனாள். கவலை அழுத்த, கண்ணீர் வடிய நடக்கின்றாள்.

'அக்கா .... அக்கா ...' எங்கோ தொலைவில் .... மிகத் தொலைவில் ....

காற்றலையில் மிதந்து .... கலந்து .... ஏற வேண்டிய பஸ் நிற்கிறது. அதையும் தாண்டி அவள் கால்கள் பயணிக்கின்றன. ■

**"முகம் பார்க்கும் கண்ணாடியில் தூசி படிந்திருந்தால் முகம் தெரியாது. அதுபோல், உனது மனம் பரிசுத்தமாக இல்லாவிட்டால் உன்னை உனக்குள் கண்டுகொள்ள முடியாது."**

– ஆத்ம போதனை –

**"தன் தோள்களை நம்பி உழைக்க வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். விடாமுயற்சி எப்பொழுதும் வெற்றி தரும்"** – ஈசாப் –

# உஷார்...

## உங்கள் வாட்ஸ்ஆப் மெசேஜ்களை மற்றவர்கள் பார்க்கலாம்!

வாட்ஸ்ஆப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மிக எளிமையான செயலிகளில் ஒன்றான வாட்ஸ் ஆப்பில் பயன்கள் இருப்பது போல பல ஆபத்துகளும் இருக்கதான் செய்கிறது.

அந்த வகையில் அமேசானில் பணி புரியும் பெண் ஒருவரின் ட்விட்டர் பதிவு தற்போது பெரும் சர்ச்சையை உருவாக்கி உள்ளது. அவர் தனது பதிவில், "நான் புதிதாக வாங்கியிருக்கும் மொபைல் நம்பரை முன்பு உபயோகப்படுத்தியவரின் வாட்ஸ்ஆப் மெசேஜ்களை என்னால் பார்க்க முடிகிறது" என தெரிவித்துள்ளார்.

வலைதளங்களில் அதிகமாக பரப்பபட்டது. இருப்பினும் இதனை சரி செய்ய வாட்ஸ்ஆப்பில் வழி இருக்கிறது.

ஒருவர் தான் உபயோகித்து வரும் மொபைல் நம்பரை மாற்றவிருக்கிறார் என்றால் வாட்ஸ்ஆப்பில் கொடுக்கப்பட்டுள்ள Change Number feature ஆப்ஷனை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் பழைய நம்பரில் இருந்த அனைத்து வாட்ஸ்ஆப் தகவல்களும் புதிய நம்பருக்கு மாறிவிடும்.

ஆனால் பலரும் இதனை செய்யாமல் நம்பரை மாற்றி விடுகின்றனர். இதனால் தனிப்பட்ட தகவல்களை மற்றவர்கள் பார்க்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

# அதைமட்டும் செய்யுங்கள்...

**1. கீழ்ப்படிதல் :**

இறைவனுக்கு மட்டும் இறுதிவரை கீழ்ப்படியுங்கள். இயேசு இறுதி மூச்சு வரை இறைவனுக்கு மட்டும் கீழ்ப்படிந்தார். அவர் சீடர் எனும் நீங்கள் அதை மட்டும் செய்யுங்கள்.

**2. உறவுகள் :**

மனித உறவின் மாண்பை உணர்ந்து அனைவருக்கும் ஆறுதலாய் இருங்கள். இயேசு தனது தாயையும், அன்புச் சீடரையும், தாய் - மகன் உறவில் ஆறுதல் பெற அழைப்பு விடுத்தார். நீங்களும் இறைவன் - மனிதன் - உலகம் என்ற முப்பரிமான உறவில் அன்பும் ஆறுதலும் ஒருவருள் ஒருவர் பெறுங்கள்.

**3. நன்மை செய்தல் :**

நன்மைகள் செய்திட காலமும், வேதனைகளும் தடையாக இருக்கவில்லை. இயேசுவிற்கு கள்வனை 'நல்ல கள்வனாக" மாற்றிட கல்வாரியின் காலமும், வேதனைகளும் தடைசெய்யவில்லை. நன்மைகள் செய்திட இனியும் தயைகூர்ந்து நாளும் நேரமும் பார்க்காதீர்கள்.

**4. மன்னித்தல் :**

மனிதம் மகிழ்ந்திட மன்னிப்பிற்கு மீறிய மாமருந்து இல்லை. இயேசு மரணத்தின் பிடியிலும் பிதாவே இவர்களை மன்னியும் என்று பிறருக்காக மன்றாடினார். நீங்கள் - எங்களுக்கு தீமை செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல - என்று சத்தியம் செய்கிறீர்கள். இந்த வார்த்தைக்கு உண்மை உள்ளவராய் இருப்பீர்களாக!

**5. அர்ப்பணித்தல் :**

நிறைவு உள்ளதாகவும், நிலையானதாகவும் உங்களது அர்ப்பணம் அமையட்டும். இயேசு தனது ஆவியை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணித்தார். நீங்கள் உங்களிடம் நிறைவாய் உள்ள அன்பு, மன்னிப்பு, அரவணைப்பு ஆகிய பண்புகளை உலகிற்கு நிலையாக அர்ப்பணித்திட உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

**6. மனிதத்தில் மரணத்தில் நிறைவு எய்தல் :**

இதோ இயேசு இறந்த பின் அவரது விலாவை குத்தித் திறந்தவனுக்கு - ஒளியாக - பார்வையைத் தந்தார். அவனும் இறைமகனை - இறைவனைக் கண்டு பரவசமடைந்தான். நீங்கள், உலகம் உங்கள் விலாவை - இதயத்தை திறக்கும்போது, அதனுள் மலர்ந்து மணம் வீசும் மனிதத்தைக் கண்டு பரவசமடைய பக்குவப்படுங்கள். ●



நிலா தமிழின் தாசன்

குறும்பா 40

## மண்தான்

எம்மொழிக்கும் சமவுரிமை என்பார்
இனிய தமிழ் மொழிக்கொன்று தின்பார்
அம்மணியோ! ஐயாமார்
ஆர்வரினும் மாற்றமில்லை
இம்மண்ணிலெம் வாயில்நிதம் மண்தான்



## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

**பொறுமை மட்டும் உனக்கிருந்தால் ...**

வரிசையில் நிற்பவர்களைப் பார்த்தது குழந்தை. கடவுள் எல்லோருக்கும் கனிகள் தருகிறார் என்றார்கள். தானும் நின்றது. கனியை வாங்கியபோது கைதவறி மண்ணில் விழுந்து உருண்டது. வேறு கனி வாங்க விரும்பியது குழந்தை. மறுபடியும் வரிசையில் நின்றுதான் வந்தாக வேண்டும் என்றார்கள். வருத்தத்தோடு வரிசையில் நின்றது. குழந்தையின் முறை வந்தபோது கனி தந்த கடவுள் காதில் கிசுகிசுத்தார்.

"கவலைப்படாதே! முதலில் வாங்கிய கனி கொஞ்சம் அழுகியிருந்தது. நான்தான் அதை மாயமாகத் தட்டிவிட்டேன். வரிசையில் நிற்கும் பொறுமை மட்டும் உனக்கிருந்ததால் நல்ல கனியாய்த் தர விரும்பினேன். நல்லவேளை நீ வந்தாய்" என்றார்.

- ஜே.ஜே.இரத்தினராஜா -

# திருஅவைச் செய்திகள்



## புனித ஸ்தேவான் திருநாள் .....

– தன்னைக் கொலை செய்தோரையும் மன்னித்த வண்ணம் இறந்த புனித ஸ்தேவான், கிறிஸ்மஸ் காலத்தின் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்.

– தூய ஆவியாரின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்று நோக்கிய வண்ணம் தன் உயிரை ஈந்த ஸ்தேவான், நமது கண்களையும், எண்ணங்களையும் வான் நோக்கித் திருப்புகிறார்.

– மனிதமானது அனைத்தும் விண்ணை நோக்கித் திருப்பப்படவேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

– "இன்றைய உலகில் பல கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கைக்காக துன்பங்களைத் தாங்கி, உயிரையும் அளிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும், கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் உயிர் மூச்சாக இருப்பது மறைசாட்சிய மரணம்.
நம் மத்தியில் மறைசாட்சிகள் எப்போதும் இருப்பர் நாம் இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்பதற்கு இதுவே அடையாளம்"

## இயேசுவைப்போல் நாமும் ஒரு கொடையாக மாறுவோமாக....

– 'கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் வேளை நற்கருணைப் பேழையைப்போல் விளங்கும் குடிலை நெருங்கி, 'உமக்கு நன்றி' என்று சொல்வதற்கு இது சரியான நரவ்".

–""இயேசு என்ற கொடையை நாம் பெற்றுக் கொண்டு, இயேசுவைப்போல் நாமும் ஒரு கொடையாக மாறுவோமாக. கொடையாக மாறுவதே, வாழ்வுக்குப் பொருள் தருகிறது".

– 'மனித குடும்பத்தில் துன்புறும் அனைவருக்கும், இம்மானுவேல், ஒளியைக் கொணர்வாராக. சுயநலத்தால், அடிக்கடி, கல்லாக இறுகிப்போகும் நம் உள்ளங்களை, அவர், அன்பின் வடிகால்களாக உருவாக்குவாராக. மகிழ்வு நிறைந்த இந்நாளில், அவரது கனிவைப் பொழிந்து, இவ்வுலகின் இருளை ஒளிமயமாக்குவாராக"

## கிறிஸ்மஸ் குடில் நினைவுறுத்துவது...

– கடவுள், விண்ணகத்தில், நம் கண்களுக்குத் தோன்றாத வகையில் தங்கிவிடவில்லை, மாறாக, இவ்வுலகில், மனிதராக இறங்கிவந்தார்.

– யோசேப்பின் அனுபவம், நம்மை கிறிஸ்மசை நோக்கி அழைத்துச் செல்கிறது. நம்மிடம் வரும் இயேசுவுக்கு செவிசாய்க்கவும், அவரை, நமது திட்டங்களிலும், நாம் எடுக்கும் முடிவுகளிலும் இணைத்துக்கொள்ளவும், யோசேப்பு நமக்குக் கற்றுத் தருகிறார்"

– கிறிஸ்மஸ் குடில் என்பது, ஒருவகையில் 'வாழும் நற்செய்தியாகும். நம்மீது அன்பு கொண்டிருப்பதன் வெளிப்பாடாகவும், நம் தினசரி வாழ்வையும், நம் நம்பிக்கைகளையும் அக்கறையையும் நம்முடன் பகிர்ந்துகொள்ளவும், நம்மிடையே மனிதராக இறைவன் பிறந்தார் என்ற நெஞ்சைத் தொடும் உண்மையை நினைவுபடுத்தி நிற்கின்றன இந்த குடில்கள்.

## தேவையில் இருப்போரை ஏக்கத்துடன் நோக்கியிருப்போம்

– கடவுளால் அடைய முடியாத, தொட முடியாத மற்றும், உதவ முடியாத மனித ஏழ்மை என்பது எதுவும் கிடையாது.

– நாம் எத்தகைய வறுமை நிலையிலும், பாவ நிலையிலும் இருந்தாலும், நாம் கடவுளால் அன்புகூரப்படுகிறோம் என்ற நம்பிக்கையை, அவர் தம் இரக்கச் செயலால் உணர்த்தி வருகிறார் .





# கருவறைக்குள் சிசு ....

குழந்தைகள் என்றாலே அழகு தான், அவர்களது சிரிப்பு, அழுகை, முக பாவனைகள், கொட்டாவி விடுவது, உறங்கும் நிலை என அனைத்தும் அழகுதான்.

ஆனால், கருவறைக்குள் இவற்றில் என்னென்ன செயல்களை எல்லாம் சிசு செய்யும் என உங்களுக்குத் தெரியுமா?

நாம் கூறிய இவற்றில் பெரும்பாலானவற்றை சிசு கருவறைக்குள்ளேயே செய்ய ஆரம்பித்துவிடும். இனிப்பு ஃப்ளுயிட்களை இரசித்து விழுங்குதல், அம்மாவின் குரலைக் கேட்டு அசைதல் என கருவறைக்குள் சிசு செய்யும் செயல்கள் நிறைய இருக்கின்றன.

அவற்றைப் பற்றி இனிக் காணலாம்...

**அழுகை :**

கருவில் இருக்கும் சிசுவை அல்ட்ராசவுண்ட் கருவி மூலம் ஆய்வு செய்தபோது, வியக்க வைக்கும் வகையில் சிசு கருவறையில் அழுவது கண்டறியப்பட்டது.

**பிணைப்பு :**

இரட்டையர்களுக்கு மத்தியில் இருக்கும் பிணைப்பு கருவறையிலேயே துவங்கிவிடுகிறது. மேலும், இரட்டையர்கள் கடைசி பத்து வாரங்களின் போது அம்மா பேசுவதை ஆக்டிவாக கேட்டுக்கொண்டிருப்பார்களாம்.

**விக்கல் :**

முதல் மூன்று மாதத்தின் போதே சிசுவிற்கு விக்கல் எடுக்க ஆரம்பித்துவிடுமாம். இதை கர்ப்பிணிகள் உணர முடியாது. நன்கு கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தால் சிறிய அளவிலான நகர்தல் ஏற்படுவதை உணர முடியும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

**புன்னகை :**

26வது வாரத்தில் இருந்து குழந்தை ரியாக்ட் செய்ய ஆரம்பிக்கிறது. இந்த காலக்கட்டத்தில்தான் கருவறையில் இருக்கும் சிசு முதன் முதலில் சிரிக்க ஆரம்பிக்கும்.

**கொட்டாவி :**

குழந்தைகள் கொட்டாவி விட்டாலே அழகாக இருக்கும். கருவில் இருக்கும் சிசுவும் கொட்டாவி விடுமாம்.

**சிறுநீர் :**

முதல் மூன்று மாதங்கள் முடியும்போது சிசுவின் உடலில் சிறுநீர் உற்பத்தி ஆரம்பிக்கும். கருவறையிலேயே சிசு சிறுநீர் கழிக்க ஆரம்பிக்கும்.

**கண்கள் திறப்பது :**

28வது வாரத்தின்போது குழந்தை முதன் முதலில் கண்களைத் திறக்கும். கர்ப்பிணி பெண்களின் வயிர் மிகுந்த வெளிச்சத்தில் வெளிப்படும் போது கருவறையில் இருக்கும் சிசு கண்களை திறக்குமாம். ஆனால், மிகச் சிறிய நேர அளவிலேயே கண்களைத் திறந்திருக்குமாம்.

**ருசி :**

கர்ப்பிணி பெண் எந்த உணவை உண்டாலும், அந்த ருசியை அம்னியோடிக் அமிலத்தின் மூலமாக சிசு ருசியை அறியுமாம். இது குறித்து நிபுணர்கள் கூறுகையில், "15வது வாரத்தில் இருந்து சிசு இனிப்பை இரசித்து உருசிக்க ஆரம்பிக்கிறது. இதனால் நிறைய இனிப்பு ஃப்ளுயிட்களை விழுங்குகிறது" என கூறுகின்றனர்.



# பேச்சுக்கு அளவும் அழகும் அர்த்தமும் அவசியம்

08


**செ. அன்புராசா அடிகள்**

*அமைதித் தென்றல், முல்லைத்தீவு, அதிர்வுகள் – 02*


**சிறிய பிரசங்கம் :**

பிள்ளை ஒன்று ஒழுங்காக நித்திரை கொள்வதில்லை எனவும் அதனால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குருவானவரிடம் வந்து கூறினாள் ஒரு தாயானவள். அக்குடும்பத்தின் நிலமையைப் புரிந்துகொண்ட குருவானவர், தான் வீட்டுக்கு வந்து வீட்டை ஆசீர்வதித்து, சிறிய வழிபாடொன்றையும் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்.

அதற்கு அத்தாய், "அப்படியென்றால் 'பாதர்', நீங்க ஒரு வழிபாடு வைக்கிறதோட, சிறிய பிரசங்கம் ஒன்றை வைத்தால் பிள்ளை நித்திரையாகி விடுவாள்!" என்றாளாம்!

**"மறையுரையை அளவாகச் செய்யுங்கள்"**

ஒவ்வொரு நாட்டின் கத்தோலிக்க ஆயர்களும் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தந்தையைக் கூட்டாகச் சந்திக்கிறார்கள். இதனை "அட் லெமினா" (At Lemina) என்பர். ஆயர் மன்றமாக ஒரு நாட்டினரோ அல்லது ஒரு நாட்டின் மாகாண ரீதியிலோ ஆயர்கள் எல்லோரும் திருத்தந்தையை ஒன்றாகச் சேர்ந்து சந்திக்கிறபொழுது தங்கள் நாடு சார்ந்த, உள்ளூர திருச்சபை சார்ந்த விடயங்களைக் கலந்துரையாடிய பின், ஒவ்வொரு ஆயரும் தம் மறைமாவட்ட விடயங்கள் தொடர்பாகத் திருத்தந்தையுடன் சுமார் 15 நிமிடங்கள் உரையாடுவதுண்டு.

2014ம் ஆண்டு வைகாசித் திங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இலங்கை ஆயர்கள் ஒன்றாகச் சந்தித்தார்கள். இச் சந்திப்பின்போது பல விடயங்களைக் கலந்துரையாடி இருந்தார்கள். இக்கலந்துரையாடலில் நற்செய்திப் பணியைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, "நீங்கள் எவ்வாறு மறையுரை ஆற்றுகிறீர்கள்? உங்கள் மறை மாவட்டங்களில் பணியாற்றும் அருட்பணியாளர்கள் எவ்வளவு நேரம் மறையுரை ஆற்றுகிறார்கள்?" என நேரடியாகவே திருத்தந்தை இலங்கை ஆயர்களிடம் வினவினார்.

அதற்கு நம் ஆயர்கள் என்ன பதில் சொன்னார்களோ தெரியாது! ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரை எவ்வாறு ஆற்றப்பட வேண்டும் என்பது பற்றி தாம் தெரிவிக்க வேண்டியதை நம் ஆயர்களுக்குத் தெரிவித்து அனுப்பியிருக்கிறார்.

**10 தொடக்கம் 15 நிமிடங்கள் தாராளமாகப் போதுமானது**

திருத்தந்தை மறையுரை ஆற்றுவது பற்றிச் சொன்ன குறிப்புக்களுள் ஒன்றுதான் "08 தொடக்கம் 10 நிமிடங்களுக்குள் மறையுரை அமைய வேண்டும்!" என்பதாகும். மேலும், தன் மருமகன் ஒரு மதிப்பிற்குரிய அருட்பணியாளர் என்றும், ஆனால் சுருக்கமாக மறையுரை ஆற்றத் தெரியாதவர் என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

08 தொடக்கம் 10 நிமிடங்களில் மறையுரை ஆற்ற வேண்டும் என்ற கருத்தினைத் தங்கள் தங்கள் மறைமாவட்டங்களில பணியாற்றும் அருட்பணியாளர்களிடம் போய்க் கட்டாயமாகக் கூற வேண்டும் எனவும் திருத்தந்தை கேட்டிருக்கிறார்.

இதனால், 2014ம் ஆண்டு ஆடித் திங்கள் 21ம் நாள் தொடக்கம் 24ம் நாள்வரை கண்டி தேசிய குருமடத்தில் குருத்துவ வாழ்வில் 05 ஆண்டுகளுக்குட்பட்ட அருட்பணியாளர்களுக்கான ஒன்றுகூடலில் உரையாற்றிய 04 ஆயர்களும் இதனைத் தெளிவாகத் தெரிவித்திருந்தார்கள்.

திருத்தந்தையின் இச்செய்தி அருட்பணியா

20ம் பார்க்க ....





- நில்மினி கஜேந்திரன்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1 தொடர் II

**1. திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபடுவதற்கான காரணம் காட்டும்போது அதை ஓர் இலக்கிய நூலாகக் கூறுவதற்கான காரணம் :**

1. பழமொழிகள் உள்ளடங்கி இருப்பதால்
2. காட்சிகள் உள்ளடக்கப்பட்டிருப்பதால்
3. புராதன சிந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதால்
4. மொழிநடை இலகுவானதாய் இருப்பதால்
5. புராதன கருத்துக்களை உள்ளடக்கி இருப்பதால்

**2. இணைத் திருமுறை நூலில் உள்ளடங்குவது**

1. தோபித் நூல் 2. எஸ்தர் நூல் 3. மீக்கா நூல்
4. செக்கரியா நூல் 5. மலாக்கி நூல்

**3. திருவிவிலியத்தில் குறிப்பிட்டுள்ளபடி கி.மு 1200 - கி.மு. 1020 இற்கு இடைப்பட்ட அரசர்களின் காலத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வு**

1. சாலமோன் மன்னன் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்தியது
2. றெகோபோவாம் அரசனாய் நியமிக்கப்பட்டது
3. இஸ்ராயல் அரச பரம்பரை ஆரம்பிக்கப்பட்டது
4. ஜெரோபோவாம் அரச புராதன வழிபாட்டுத் தலத்தை புனரமைத்தது
5. வட, தென் அரசுகள் உருவாகியமை

**4. கற்றோரின் மொழி என அழைக்கப்படுவது எது?**

1. இலத்தீன்மொழி 2. கிரேக்க மொழி 3. எபிரேய மொழி
4. ஆங்கில மொழி 5. அரபு மொழி

**5. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பை குறிக்கும் பெயர் :**

1. செப்துவாஜித் 2. பிப்லியோன் 3. வல்கேட்
4. மசோரா 5. கும்ரான்

**6. இஸ்ராயல் வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்ட இறை செயற்பாடுகள் கிறிஸ்துவின் மூலம் முழுமையடைந்த விதத்தினைக் குறிப்பிடும் திருமுகம் எது?**

1. எபிரேயர் 2. 1 திமோத்தேயு 3. 1 கொரிந்தியர்
4. II திமோத்தேயு 5. II கொரிந்தியர்

**7. திருவிவிலியத்தில் இறை ஏவுதல் பெற்ற எழுத்தாளர் எழுதியவற்றின் மூலம் இறை வெளிப்பாட்டைப் பெறுவோர் :**

1. இறைமக்கள் ஆவர் 2. கிறிஸ்தவ விசுவாசிகள் ஆவர்
3. திருவிவிலிய அறிஞர்கள் ஆவர் 4. திருவிவிலிய வாசகர்கள் ஆவர்
5. திருவிவிலியத்தைக் கற்றவர்கள் ஆவர்

**8. இயேசுவின் வாழ்க்கையோடு இணைந்து காணப்பட்ட பிரதேசமாகிய கலிலேயாவின் வடக்கு எல்லை :**

1. கார்மேல் வடக்கு எல்லை ஆகும் 2. லெபனான் மலைத்தொடர் ஆகும்
3. எசற்றோ லோன் பள்ளத்தாக்கு ஆகும் 4. கப்பர் நாகூம் ஆகும்
5. சீனாய் உபகண்டம்

**9. திருவிவிலியத்தின் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ள திருமுகம் எது?**

1. 1 திமோத்தேயு 2. எபிரேயர் 3. 1 கொரிந்தியர்
4. 2 கொரிந்தியர் 5. 2 திமோத்தேயு




அன்புத் தந்தைக்கு வணக்கம்!

பத்திரிகையின் வளர்ச்சிக்கு வாசகர்களின் காத்திரமான விமர்சனமே தலையாயது. அதன் பிரகாரம் பொன்விழாக் கொண்டாடி புகழ் பல பெற்றத் தொண்டனே! கடந்த பதினொரு மாதங்களிலும் உன்னில் என் மனதைத் தொட்ட ஆக்கங்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

2019 தை மாதத் தொண்டனில் அருட்பணி நவாஜியின் **"நித்தமும் மகிழ்ந்திருக்கக் கொடுங்கள்"** எனும் கட்டுரையில் வெளிவந்த வார்த்தைகள் எல்லாமே சிறப்புதான். மாசி மாத இதழில் **"நான்கு ஆண்டுகளில் நடக்கப்போவது என்ன?"** எனும் ஆக்கத்தில், 'மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் மடிந்து போகும்" என்ற வரிகள் தான் மறக்க முடியாதது. பங்குனித் தொண்டனில் அதிவந்தனைக்குரிய ஆயர் அவர்களின் **"அர்த்தமுள்ள தவக்காலம்"** பற்றிய விபரத்தில் 'மனிதனின் முக்கோண உறவு' பற்றிய குறிப்புதான் மிக மிக அழகான வார்த்தைகளின் வெளிப்பாடாக மனதிலே பதிந்தது. மீண்டும் சித்திரையின் **"சீரிய சிந்தனைகள்"** என்னும் வித்தகர் வயலற் சரோஜாவின் சிறப்பான ஆக்கமும் அதில் இடம்பெற்ற, 'ஒவ்வொருவரும் தத்தமது தனித்துவத்தை இனங்காண்பதே முதல் வெற்றி" எனும் இறுதி வரிகளும் யதார்த்தமானது. மீண்டும் வைகாசி மலரில் "பட்டும் படாமலும் பலவித உண்மைகளை புரியவைத்தது **"கிறிஸ்தவர்களைத் தாக்கிய உங்களுக்கு அந்த அழகான வரிகள்...."** மனதை உலுக்கிய சித்திரை உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த துயர சம்பவத்தை வெளிக்காட்டும் பகுதி.

ஆனித் தொண்டனில் சிந்திக்க வைத்த சிரிப்புக் கட்டுரை அருட்பணி நவாஜியின் **"வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்"** கட்டுரையாகும். மீளவும் ஆடி மாத இதழில் **"நான் ஏழையாய் இருந்தபோது...."** எனும் ஆக்கம் பணக்காரனையே அடித்து நொறுக்கிப் போட்ட ஏழையின் ஆதங்கத்தை மறக்கவே முடியாது. மீண்டும் ஆவணி இதழில் **"என் தலையில் சிறுநீர் கழித்துவிட்டுச் செல்வோர்"** நெல்சன் மண்டேலாவின் 'சகிப்புத்தன்மை பெரிய சாம்ராஜ்யத்தையே உருவாக்கும்' என்ற உண்மைக் கூற்றே. **"இராயப்பு யோசப் ஆண்டகைக்குப் பிறகு ...."** என்று புரட்டாதி மலரில் வெளியான கத்தோலிக்கருக்குரிய அச்சுறுத்தல் பற்றிய விமர்சனம் மனதில் பதிந்துள்ளது. **"நான் பாவம்"** தேவ அலோசியஸ் எழுதிய மட்டக்களப்பின் அடையாளச் சின்னமான கல்லடிப் பாலம் பற்றிய கட்டுரை, ஆதங்கத்துடன் அமைந்திருந்தது. உண்மையின் வெளிப்பாடும் அதுதான். அதைவிட நமது கார்த்திகையின் **"பொன்விழா மலர்"** மிகச் சிறப்பான இனிய பல ஆக்கங்களுடன் வெளிவந்தது. இந்தக் காலத்தில் பழையன கழிதலும், புதியன புகுதலும் சிறப்புத் தான். இனிவரும் காலங்களிலும் தொண்டன் மேலும் சிறப்புற வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி

*திருமதி. பீ. ஜ. லைடி ஜொன்சன்.*
செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.

18ம் பக்கத் தொடர் ....

ளர்களுக்கு எத்தகைய உணர்வலையை ஏற்படுத்துகிறதோ தெரியவில்லை! ஆனால், பொதுநிலையினருக்கு திருத்தந்தையின் மேற் சொன்ன கருத்து தேனாமிர்தமாக இருக்கப்போகிறது என்பதில் துளியளவும் ஐயமில்லை.

சில அருட்பணியாளர்களின் மறையுரைகளைக் கேட்டுக் கேட்டு களைத்துப் போனவர்களுக்கும் இன்னும் அவர்களின் மறையுரைகளைக் கேட்டு மயங்கி விழாதவர்களுக்கும் இச்செய்தி, கடவுள் தோன்றிக் காட்சி கொடுத்தது போன்ற ஓர் இறைவெளிப்பாடாகக்கூடத் தோன்றலாம்!

திருத்தந்தையின் இச்செயலுக்காக - நற்செய்திக்காக இறைவனுக்கு நன்றி சொல்லிப் பலர் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்க விழைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

**10. பஞ்சாகமம்**

1. சட்ட நூல்களின் தொகுதியைச் சேர்ந்ததாகும்
2. இறைவாக்கினர் நூல்களின் தொகுதியைச் சேர்ந்ததாகும்
3. திருமுகங்கள் தொகுதியைச் சேர்ந்ததாகும்
4. லேவியர் ஆகமத் தொகுதியைச் சேர்ந்ததாகும்.
5. இணைச்சட்ட நூல் தொகுதியைச் சேர்ந்ததாகும்.

**11. எந்த அரசனுடைய காலத்தில் திருவிவிலியம் எழுதப்பட்டது?**

1. சவுல் 2. தாவீது 3. சாலமோன் 4. ரெகபோவாம் 5. ஜெரோபோவாம்

இறை அருளினாலும், தூய அப்போஸ்தலிக்க ஆட்சிப் பீடத்தின்

அருளினாலும் மட்டக்களப்பு மறைமாநில

ஆயர் **ஜோசப் பொன்னையா** ஆகிய நாம்

நம் மறைமாநிலத்திலுள்ள சகல குருக்கள், துறவியர்,

இறைமக்கள் அனைவருக்கும்

இறைவனின் அருளும் ஆசீரும் விரும்பி எழுதும்

## நற்கருணை ஆண்டிற்கான (2020) மடல்

திரு அவையின் உயிரும் ஊற்றுமான நற்கருணை ஆண்டவரை மகிமைப்படுத்தும் முகமாக திருத்தந்தையர்கள் ஆங்காங்கே நற்கருணை மாநாடுகளை ஒழுங்குபடுத்தி வந்துள்ளார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் 52வது நற்கருணை மாநாட்டினை கங்கேரி நாட்டின் புடாபெஸ்ட் எனும் நகரில் 2020ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ம் திகதியிலிருந்து 20ம் திகதி வரை சிறப்பு மிக்க நிகழ்வாக பிரகடனப்படுத்தியுள்ளார். தாய்த் திரு அவையின் ஒளியில் வழிசெல்லும் நாமும் நமது மறைமாநிலத்தில் 2020ம் ஆண்டை "நற்கருணை ஆண்டாக" பிரகடனப்படுத்தியுள்ளோம்.

இதற்கான ஆயத்த நிகழ்வுகள் கார்த்திகை மாதம் 30ம் திகதி மறைமாவட்ட மேய்ப்புப் பணி சபை மாநாட்டில் இடம் பெற்றன. அன்றைய தினம் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மிக்கேல் ஜெகன் கூஞ்ஞே அருளிய உரையை அடித்தளமாகக்கொண்டு அங்கு பிரசன்னமாகியிருந்தோர் பகிர்ந்த ஆலோசனைகளுக்கமைய பரிந்துரைகளை உங்கள் முன் வைக்கின்றோம். இவற்றை சொந்த வாழ்விலும், பங்கு சமூகத்திலும், மறைக் கோட்டத்திலும், மறை மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தி நற்கருணை பக்தியில், நற்கருணை வாழ்வில் சிறந்தோங்க வேண்டுமென்று ஆசிக்கின்றோம்.

**சொந்த வாழ்வில்**

- நற்கருணை ஆண்டவருக்குரிய மதிப்பையும், மரியாதையையும் அளித்தல்.
- நற்கருணை சந்திப்புக்களை நடைமுறைப்படுத்தல்
- தகுந்த ஆயத்தத்துடன் நற்கருணை உட்கொள்ளல்
- நற்கருணை ஆராதனைகளை வெவ்வேறு மட்டத்தில் ஒழுங்குபடுத்தும் போது பிரசன்னமாயிருத்தல்.
- தொண்டன், வெட்டாப்பு பத்திரிகைகளை குடும்பங்கள் தோறும் பெற்று நற்கருணையைப் பற்றி வரும் கட்டுரைகளை வாசித்தல்.
- பிள்ளைகளுக்கு நற்கருணைப் பக்தியை ஊட்டுதல்.
- இயன்றளவு ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- அடுத்தவரிலும் நற்கருணை ஆண்டவர் வாழ்கின்றார் என்பதை உணர்ந்து அடுத்தவருக்கு மதிப்பும், மரியாதையும் அளிக்க முன்வரல்.
- திருப்பலியில் மரியாதைக்குரிய ஆடைகளுடன் பங்குகொள்ளல்.

**பங்கு வாழ்வில்**

- தினமும் திருப்பலியின் பின் நற்கருணை ஆண்டிற்கான ஜெபத்தை ஜெபிக்கவும்.
- வெள்ளிக்கிழமை தோறும் ஒரு மணிநேரம் நற்கருணை ஆராதனையை ஒழுங்குபடுத்தல்.

- திருப்பலிக் கொண்டாட்டங்களை முக்கியமாக ஞாயிறு தினத்தில் தகுந்த முறையில் ஆயத்தம் செய்தல்.
- திருப்பலியின் முன்னுரைகள், வாசகங்கள், திருப்பாடல் பல்லவிகளை ஏற்கெனவே படித்து தகுந்த ஆயத்தத்தோடு அவற்றை முன்னெடுத்தல்.
- திருவழிபாட்டு ஒழுங்குகளுக்கு அமைய திருப்பலிகளை ஒப்புக்கொடுத்தல்.
- வழிபாட்டு ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட பாடல்களை திருப்பலியில் உள்வாங்குதல்.
- ஒப்புரவு வழிபாடுகளை ஒழுங்குபடுத்தி இறைமக்கள் பாவ அறிக்கை செய்து மன்னிப்புப் பெற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- முதல்நன்மை பெற இருக்கின்ற பிள்ளைகளை நற்கருணை அறிவில், பக்தியில் உருவாக்குதல்.
- முதல்நன்மை எடுத்த பிறகும் தொடர் பயிற்சிகளை அவர்களுக்கு ஏற்படுத்தல்.
- முதன்நன்மை பெறும் பிள்ளைகளின் பெற்றோர், ஞானப் பெற்றோருக்கான கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்.
- மறைக்கல்வி வகுப்புக்களில் நற்கருணை பற்றிய கருத்துக்களை பிள்ளைகளுக்கு எடுத்துரைத்தல். முடிந்தால் மாதம் ஒரு தடவை பிள்ளைகளுக்கான ஒரு மணி நேர ஆராதனையை ஒழுங்குபடுத்தல்.
- மறையாசிரியர்கள் நற்கருணையுடன் ஆழமான உறவு கொண்ட புனிதர்களைப் பற்றிய கருத்துக்களை மறைக்கல்விப் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளல்.
- அன்பிய ரீதியில் திருப்பலிகளை நிறைவேற்றி மூலை முடுக்கெல்லாம் நற்கருணைப் பக்தியை இறை மக்களில் ஆழப்படுத்தல்.
- பங்குக்குரு, பக்திச்சபைகள் இல்லத்தரிசிப்புக்களை மேற்கொண்டு திருப்பலிக்கு சமூகம் கொடுக்காதவர்களை சமூகமளிக உற்சாகப்படுத்தல்.
- திருப்பலிப் பாடல்கள், செபங்களை ஒரு குறிப்பிட்ட பகுதியினருடன் மட்டுப்படுத்தாது முழு இறைமக்களும் பங்கு பற்றக்கூடிய வழிமுறைகளை செயற்படுத்தல்.
- ஒரு பங்கு நற்கருணை சமூகம் என்பதை உணர்ந்து பங்கு மேய்ப்புப் பணி சபையினர் கலந்து ஆலோசித்து அப்பங்கில் வாழும் வீடற்ற ஒருவருக்கு வீடமைத்துக் கொடுத்தல். அல்லது அறிவாற்றல் இருந்தும் கல்வி கற்க பொருளாதார வசதி இல்லாத பிள்ளைகளை இனங்கண்டு கைகொடுத்து உதவுதல்.

**மறைக்கோட்டத்தில்**

- மறைக்கோட்டத்தில் பணியாற்றும் பங்கு மேய்ப்புப் பணிச் சபை, அப்போஸ்தலிக்க சபையினருக்கு ஆங்காங்கே கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தல்.
- மறைக்கோட்ட ரீதியில் நற்கருணை மாநாடுகளை ஒழுங்குபடுத்தல்.
- இறைபணியாளர்கள் (குருக்கள், அருட்சகோதர, சகோதரிகள்) 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒன்று கூடி நற்கருணை கருத்தரங்கை வைத்து ஒரு மணி நேர ஆராதனையில் ஈடுபடல்.
- மறையாசிரியர்களை நற்கருணை அறிவில் ஆழப்படுத்தல்.
- வாசகர்களுக்கான பயிற்சிகளை அளித்தல்.

**மறைமாவட்டத்தில்**

- புதுநன்மை ஆயத்தத்திற்காக பொதுவான பாடத்திட்ட புத்தகத்தை தயார் செய்தல்.
- மாபெரும் நற்கருணை மாநாட்டினை ஆனி மாதம் 14ம் திகதி ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா அன்று கொண்டாடுதல். இதற்கு ஆயத்தம் செய்யும் முகமாக பங்குகள் தோறும் முதல் மூன்று நாட்களுக்கு நற்கருணை ஆராதனைகளை ஒழுங்குபடுத்தல்.
- வருடத்தில் ஒரே தினத்தில் அனைத்து பங்குகளிலும் 12 மணிநேர நற்கருணை ஆராதனை ஒழுங்குபடுத்தல். (திகதி பின்னர் அறிவிக்கப்படும்)
- நற்கருணை ஆராதனைகளை அல்லது நற்கருணை பற்றிய கருத்துக்களை வானொலி, தொலைக்காட்சி மூலமாக வெளிப்படுத்தல்.
- திருவிழா நவநாட் காலங்களில் பொதுநவநாளன்று திருப்புகழ் மாலை வழிபாட்டினை தகுந்த முறையில் ஒழுங்கு செய்தல்.
- எல்லாத் திருவிழாக் காலங்களில் வரும் நவநாட்களில் நற்கருணை பற்றிய கருத்துக்களை மையப்படுத்தி ஒரே மாதிரியான தலைப்புக்கள் தயார் செய்து அனுப்பி வைக்கப்படும். அவற்றை நடைமுறைப்படுத்தவும்.
- பங்கிற்கு ஒரு நற்கருணைப் பணியாளரையாவது உருவாக்கி பணி செய்ய ஊக்கு வித்தல்.
- பொதுநிலையினர் ஆணைக்குழுவும், சமூக தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து வருட இறுதியில் பின்வரும் போட்டிகளை நடாத்துதல்.
    - நற்கருணை பற்றிய கவிதை
    - நற்கருணை பற்றிய கட்டுரை
    - நற்கருணை பற்றிய பாடல்
    - நற்கருணை பற்றிய இறைவார்த்தைகளை மையமாக வைத்து குடும்ப வினாவிடைப் போட்டி

உங்கள் அனைவரையும் நற்கருணை ஆண்டவரின் கரத்தில் ஒப்படைக்கின் றோம். அவரது ஆசீர் உங்கள் அனைவர் மீதும் இருப்பதாக! நற்கருணை ஆண்டவரை சுமந்த அன்னை மரியாளின் பரிந்துரை செபத்தின் வல்லமை உங்கள் மேல் தங்குவதாக!

கிறிஸ்துவில் உங்கள் மேல் என்றும் பற்றுள்ள

பேரருட்திரு. **ஜோசப் பொன்னையா ஆண்டகை**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



# கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

- குடிமகன் -

**2020**ம் ஆண்டும் பிறந்துவிட்டது: இலங்கையில் அரசியல் நடப்புகளை மக்களும், உலகமும் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர். தொடர்பு சாதனங்களும் மௌனித்துவிட்டனபோல்தான் விளங்குகின்றது. மௌனமாக புற்றுநோய் ஊடுருவல் செய்வதுபோல் சில காய் நகர்த்தல்கள் நாசூக்காக மேற்கொள்ளப்படுகின்றன போலும். எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்கள் எல்லாம் மௌனித்துவிட்டார்கள்; 'ஞானமிக்க தேரர்கூட தனது அமைப்பை கலைத்துவிட்டதாகக் கூறுகின்றார். சிறுபான்மையினர் தாம் சிறுமைப் படுத்தப்பட்டுவிட்டதாக சிந்திக்க ஆரம்பித்து விட்டனர்.

தமிழர் தரப்பு துண்டு துண்டாக பிரிந்து கொண்டே போகின்றது. கிடைக்க இயலாதவற்றை கேட்டுப் போராடித்தான் என்ன பயன்...? என்ற நிலைக்கு மக்கள் சலித்துப்போய் வந்துவிட்டார்கள் போலத்தான் விளங்குகின்றது.

தனிநாடு என்ற நிலையில் இருந்து, பின்னர் இணைந்த மாகாணசபைகள் என்றாகி இப்போது அதிகாரப் பகிர்வு தேவையில்லை, அபிவிருத்திதான் தேவை என்று 'உச்சம் சொல்லியாகிவிட்டது.

இலங்கையில் இந்த 'உச்சங்கள்" தங்கள் தங்கள் காலப்பகுதியில் வினோதமான உச்சாடனங்களை செய்துள்ளார்கள். அம்மணி சொன்னார், 'சமாதானத்திற்கான யுத்தம்" என்று. வினா தூனா, 'பெரும்பான்மையோர் மரங்கள், சிறுபான்மையோர் அதைச் சுற்றவும் பரவும் கொடிகள்" என்று சொன்னார். யுத்தம் அழிவைத்தான் தந்தது; சமாதானத்தைத் தந்ததா...? என்ன 'தியரியப்பா...? இதெல்லாம்.

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் 'ரியாலிட்டி ஷோ' எனப்படும் நிகழ்வுகளில் நடுவர்கள் போட்டியாளர்களைப் பாராட்டுவார்கள். குற்றம் கண்டுபிடிப்பார்கள். இதெல்லாம் நடுவர்களின் சொந்தக் கருத்துகள் அல்ல; அது அவர்களுக்கு தயாரிப்பாளர்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின்படியே சொல்கின்றார்கள்.

இப்படித்தான் நமது வீட்டுக்காரர்களும் ஒவ்வொரு சித்திரைப் புத்தாண்டுக்கும், தீபாவளிக்கும் தீர்வு என்றார்கள்; எதுவுமில்லை. ஆனால் அவர்கள் விமர்சிக்கப்பட்டாலும் அவர்களைத் தவிர வேறு தெரிவுகள் இல்லையென்றே சொல்லப்படுகின்றது. மற்றவர்கள் எல்லாம் 'வெத்து வேட்டுகள்" என்றே கணிப்புப் பெறுகிறார்களாம். உண்மையில் தனித்தனியே தேர்தலில் நின்றால் எல்லாம் வெளிச்சமாகும். சில இடங்களில் இலட்சங்கள்தான் பேசுகின்றன; இலட்சியங்கள் அல்ல.

பச்சை அணியாள் ஒருவர் இப்படிச் சொன்னார், "பொதுத் தேர்தலின் பின்னர்தான் ஆட்டம் தெரியும்; இப்போது அடக்கி வாசிக்கின்றார்கள்". இதைக் கேட்டதும் எனக்கு கிராமத்துப் பேச்சு வழக்கொன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

"இம்புட்டுக்கே அம்புட்டு என்டா அம்புட்டுக்கு எம்புட்டு வரும்....?"

தந்தை செல்வா ஒருமுறை சொன்னார் - "தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"

கடவுள் எவ்வளவு காலம்தான் பொறுப்பார் என்று பார்ப்போம்....

■




# சரித்திரம் புகழ் பேசட்டும்



- அருட்பாவலர் நிலா தமிழின்தாசன் -

*எல்லோரிடத்துமன்பு எவன் செய்வா னவனிறைவன்*
*நல்லோரிடத்து நட்பை நாடுவோனுயர்வு காண்பான்*
*செல்வவாழ்விருந்து மேழைக் கிரங்கிடான் இழிகுலத்தோன்*
*வல்லமையிருந்தும் நீதிக்கடிபணிவோனே வீரன்*
*கல்விதானுயர்ந்த சொத்தென் றெண்ணுவோன் உலகையாள்வான்*
*சொல்வதைச் செயலிலாற்றும் வல்லவன் வாழ்வில் மேலோன்*
*நன்றியை மறவாதெண்ணும் நன்மனம் கொண்டோருய்வர்*
*என்றுமே இரக்கங்காட்டும் இயல்பினர்க்கிதயம் கோயில்*
*ஒன்றுபட்டுயர்வுகாண உழைப்போரை உலகு வாழ்த்தும்*
*கொன்றிடா துண்மை வாழ்விற் கொண்டவர் குலந் தழைக்கும்*
*நன்றெனுஞ் செயலை நாளும் நாளும் நாடுவோர் பெயர் நிலைக்கும்*
*இன்றுநந்நாளென்றெண்ணிச் செயற்படச் செழிப்புண்டாகும்*
*தாய்மனமுவந்து வாழ்த்தின் தவப்பயன் வேறொன்றில்லை*
*தூய்மையிற்றூய்மை நல்ல ஒழுக்கமே உயர்விலேற்றும்*
*தேய்கையில் மணக்கம் நல்ல சந்தணம் தியாக வாழ்க்கை*
*தோயினும் துன்பத் தீயில் துணிவினை இழத்தல் ஈனம்*
*தாய்மொழி நாட்டுப் பற்றைத் தவறிட விட்டோல் புல்லர்*
*சாய்வது உண்மை மண்ணிற் சரித்திரம் புகழ் பேசட்டும்.....!*




## பூமிக்கு மேலும் இரண்டு நிலவுகள் இருப்பது கண்டுபிடிப்பு!

பூமிக்கு மேலும் இரண்டு நிலவுகள் இருப்பதை ஹங்கேரி நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலவு இருப்பது குறித்த வாதம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் நீடித்து வருகிறது. இதற்குத் தீர்வு தரும் வகையில் பூமிக்கு கூடுதலாக 2 நிலவுகள் இருப்பதை தற்போது ஹங்கேரி ஆராய்ச்சியாளர்கள் ஆதாரத்துடன் நிரூபித்துள்ளனர். அந்த இரு நிலவுகளும் தூசுக்கள் நிறைந்து காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். பூமியில் இருந்து நிலவு உள்ள தொலைவிலேயே இரு நிலவுகளும் இருப்பதாகவும் ஆனால் மங்கலான ஒளியை இவை உமிழ்வதால் கண்டறிவதில் சிக்கல் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இவற்றை முதன் முதலில் கண்டறிந்த போலந்து ஆராய்ச்சியாளர் கோர்ட்லெவ்ஸ்கியின் பெயர்தான் இந்த நிலவுகளுக்கு சூட்டப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிற்குள் செயற்கை நிலாவைத் தயாரித்து விண்வெளிக்கு அனுப்ப சீனா திட்டமிட்டுள்ளதையடுத்து தற்போது இயற்கையாகவே இரண்டு நிலவு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது மேலும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்விராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேனிசர்ஸ், 142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977



# வினாவிடைப் போட்டி இல. - 22

1) நற்செய்தி அறிவிப்புப் பணி எமது வாழ்க்கையில் எவ்வாறான மாற்றத்தை செய்யக் கூடாது என திருத்தந்தை அவர்கள் கூறுகிறார்? ..........................................................

..........................................................

2) வயோதிப இல்லத்தில் சேர்க்கப்பட்ட ஒரு தாயின் உள்ளத்து உணர்வுகள் மூலம் அவதானிப்பது என்ன? ..........................................................

..........................................................

3) ஆண்டவர் இயேசு இவ்வுலகை விட்டு விண்ணகம் செல்லும் முன் தம் சீடர்களை நோக்கிக் கூறியது : ..........................................................

..........................................................

4) Lie travels around the world while truth puts on the shoes எனும் பழமொழியை எவ்வாறு மொழிபெயர்க்கலாம்? ..........................................................

..........................................................

5) இன்னும் ஏன் தயக்கம் ..........................................................
அவை பனிபோல் மறைந்திட ..........................................................
அது ..........................................................?

6) வரிதண்டுபவர் தன்னைப் பற்றி கூறிய நான்கு சொற்கள் எவை?

..........................................................

..........................................................

7) மனிதன் கடவுளாக விரும்பினான். கடவுள் மனிதனாகப் பிறந்தார். இதனை புனித யோவான் எவ்வாறு கூறுகிறார்? ..........................................................

..........................................................

8) அமேசான் மழைக் காட்டின் பரப்பளவு யாது?

..........................................................

9) மண்ணால் மனிதனை உருவாக்கல் எதனை அடையாளப்படுத்துகிறது?

..........................................................

10) வட்ஸ் அப்பில் தவறி டெலிட் செய்த மெசேஜ்களை மீண்டும் படிக்க செய்யவேண்டியது என்ன? ..........................................................

..........................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

பங்கு / தொ.பே.இல : ..........................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 22**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.01.2020



திருவிவிலியக் கற்போம் 199

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

## சரியான விடைகளை திருத்தூதர் பணி 10:18 லிருந்து தெரிந்து எழுதவும்

1. பேதுரு யார் வீட்டில் விருந்தினராகத் தங்கியிருந்தார்?

 ..................................................................................................

2. “பெரிய கப்பற் பாயைப் போன்ற ஒரு விரிப்பு நான்கு முனைகளிலும் கட்டப்பட்டு என்னிடம் வந்தது......” இக் காட்சி கண்டவர்:

 ..................................................................................................

3. வானதூதர் அவரிடம் “.......................................................................... ” என்றார்!

4. “எலிமா” என்பதன் பொருள் என்ன?

 ..................................................................................................

5. யூதர்களும், யூதம் தழுவிக் கடவுளை வழிபட்டவர்களும் யாரை பின்தொடர்ந்தார்கள்? ..........................................................................

6. கால் ஊனமுற்றிருந்த ஒருவரைப் பவுல் நடக்கச் செய்ததைக் கண்ட மக்கள் எந்த மொழியில் குரல் எழுப்பினார்கள்?

 ..................................................................................................

7. ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவுக்காக தங்கள் உயிரையும்கொடுக்கத் துணிந்தவர்கள் யார்?

 ..................................................................................................

8. பவுல் பேசியதைக் கேட்டு மனம்மாற்றம் பெற்று திருமுழுக்கு பெற்ற பெண் யார்?

 ..................................................................................................

9. எந்த நகரில் சிலைகள் நிறைந்திருப்பதைப் பவுல் கண்டு மனம் கலங்கினார்?

 ..................................................................................................

10. பவுல் கொரிந்து நகரில் எத்தனை ஆண்டுகள் இறைவார்த்தையைக் கற்பித்தார்? ..........................................................................

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................

பங்கு / தொ.பே.இல : ..............................................

..............................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..............................................

..............................................

அனுப்பவேண்டிய முகவரி :

திருவிவிலியம் கற்போம் - 199
‘தொண்டன்”
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

முடிவுத் திகதி

31.01.2020

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)






# போட்டி முடிவுகள்!

**திருவிவிலியம் கற்போம் - 197 விடைகள்**

1. அருள்பொழிவு பெற்றவர்
2. சமாரியப் பெண்ணிடம்
3. 'உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையிலே இவரே"
4. உங்களுள் பாசம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்.
5. சிலோவாம் குளத்தில்
6. இலாசர்
7. சீமோன் பேதுரு
8. மால்கு
9. கபதா
10. நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்.

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

* **சதானந்தன் மதுசிக்கா,**
6/100, பிரதான வீதி,
அந்தோனியார் புரம்,
சொறிக்கல்முனை - 3.

* **M. அனுஷியா,**
வளனார் புரம்
தன்னாமுனை.

* **அபிகெயில் ஆனந்தகுமார்,**
இல. 46, புனித செபஸ்தியார் வீதி,
புளியடிக்குடா, மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 149 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **வி. செறோணி,**
முனை வீதி,
தம்பிலுவில் - 01.


**2ம் பரிசு - 300/=**

* **ஸ்ரீ. குளோறி மொன்ஷரா,**
இல. 71, சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* **D. விகாஷ்,**
45C, வில்லியம் வீதி,
மணல்சேனை - 01,
கல்முனை.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)



# துன்பத்தை உதறித் தள்ளு

– தமிழ் –

ஊரில் ஒரு சலவைத் தொழிலாளி. அவரிடம் வயதான கழுதை ஒன்று. அதற்கு வயதாகிப் போனதால் பொதி சுமக்கச் சிரமப்பட்டது. நடக்கவும் சிரமப் பட்டது. ஒருநாள் தொழிலாளி தன் கழுதையுடன் சென்று கொண்டிருந்தபோது கழுதை வழியில் இருந்த பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்து விட்டது.

எப்படியாவது அந்தக் கழுதையைத் தொலைத்து விட நினைத்திருந்த தொழிலாளி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினான். கழுதையை மேலே தூக்கிவிடாமல் அப்படியே கிணற்றில் புதைத்து விடுவோம் என அருகில் இருந்தவர்களைக் கூப்பிட்டார்.

கழுதை அப்படியே புதைந்து போகட்டும் என்று எல்லோருமாகச் சேர்ந்து மண்வெட்டியைக் கொணர்ந்து அருகிலிருந்த மண்ணை வெட்டிக் கிணற்றுக்குள் தள்ளினர்.


ஆரம்பத்தில் தன் மீது விழும் மண்ணைக் கண்டு திகைத்த கழுதை தனது கதை இத்தோடு முடிவடைந்துவிடும் என நினைத்தது.

தனக்கு நேரும் துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்தால் பயனில்லை. ஏதாவது செய்து தப்பிக்க வேண்டும் என திட்டம் போட்டது.

தன் மீதும் விழும் மண்ணை உடம்பைச் சிலிர்த்து உதறியபடியே கொஞ்சம் கொஞ்சமாக அடி எடுத்து வைத்து வெளியே வர முயற்சித்தது. மேலே இருந்தவர்களும் மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டேயிருந்தனர். தப்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளே பிரதானமாக இருந்ததால் கழுதையும் வேகமாக மண்ணை உதறிவிட்டபடி கடைசியில் மேலே ஏறி வந்தது.

தொழிலாளியும் கழுதையின் விடாமுயற்சியில் வியந்து மனமிறங்கி தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.

**மனிதர்களாகிய நமக்கும் பல விதங்களில் சோதனைகளும் துன்பங்களும் வந்து சேரலாம். அதையே நினைத்துக்கொண்டிருக்காமல் எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு, மீண்டு வர முயற்சி செய்வதே புத்திசாலித்தனம். புதிய ஆண்டு, வரப் போகும் சோதனைகளையும் துன்பங்களையும் உதறிவிட்டு மேலே வருவதற்கு முயற்சி செய்வோம்! எழுந்து நடப்போம்!!**



கிறிஸ்து பிறப்புவிழா திருப்பலி - பேராலயம்

"மனித உரிமைகளுக்காக எழுவோம்"